


# சாட்சியமாகும் உயிர்களின் கதை

அக்கரைப்பற்று





# சாட்சியமாகும்
# உயிர்களின் கதை

அக்கரைப்பற்று

முஸ்லிம் தேச இழப்பீட்டு ஆய்வு மையம்

Title : Satsiyamakum Uyirkalin Kathai

Author : Deprivation Research Centre for Muslim Nation

Language : Tamil

Publisher : Deprivation Research Centre for Muslim Nation
268/1, New Mosque Road
Akkaraipattu - 06
Sri Lanka
+94 674922466, +94774124049, +94 716230161
email : drcmnakp@yahoo.com

ISBN : 978-955-50914-0-4

Copy© Right : Author

Pages : xiv + 64

First Edition : 21. 03. 2008

Price : LKR 130/-

## நன்றிகள்....

தகவல் திரட்டுவதில் களம் நின்று அரும்பணியாற்றிய முஸ்லிம் தேச இழப்பீட்டு ஆய்வு மையத்தின் அங்கத்தினர்கள்.

எஸ்.எம். அஸ்மிர் - *செயலாளர்*
எஸ்.ஏ. அன்வர் அலி - *பொருளாளர்*
ஏ.ஜி. அஸ்மி - *உப செயலாளர்*
எம்.எச். அமீர் - *உப பொருளாளர்*
யூ.எல். முஸ்தபா - *இணைப்பாளர்*

### தகவல் ஆய்வுக் குழு

எம்.கே. சஹீம்
எஸ்.எல். ஹகீல்
ஏ.எல். ஜலால்
எஸ்.ரி. முசாதிக்
ஏ.ஜி. றிஸ்மி
ஏ.ஏ. நயீம்
எம்.சி. முர்சித்
என்.ரி.எம். றிப்கான்
கே.எல். தௌபீக்
ஏ.எல். உபைத்
எஸ். சதாத்
எம்.எம். பஜ்ரி
எம்.என்.எம். பசீல்
எம்.ஏ. கியாஸ்
எஸ்.எல். ஹமீட்

### ஆலோசனைக் குழு

எஸ்.எம். இத்ரிஸ்
யூ.எல். நஜீம்
ஜனாப். ஸலாம்
ஏ.எஸ். அன்சாரி
ஏ.எல். ஹுஸைனுடீன்

### வடிவமைப்பு

என்.ரி.எம். றிஸ்வி

### திட்டமிடல் குழு

ஏ.எல். ஆஸாத் முகம்மட்
எம்.ஐ. உவைஸ்
எம்.எச். இம்ரான்

### தகவல் தந்துதவிய...

அக்கரைப்பற்று ஜும்ஆ பெரியபள்ளிவாசல்
அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம்
எம்.ஐ. உதுமாலெவ்வை *(மு.ப.உ)*
யூ.எல். அஜ்வத் *(பிரதேச செயலகம்)*
எம்.ஐ. அகமட் லெவ்வை *(ஓய்வுபெற்ற அதிபர்)*
ஏ.ஆர்.ஏ பிஸ்றுல் ஹாபி *(ஆசிரியர்)*
எம். றஊப் காரியப்பர் *(ஸம் ஸம் பாமஸி)*
எம்.எச். முஸ்தாக் முகம்மட் *(துறைமுக அச)*

### அன்பளிப்பாளர்கள்

- ஹாலித் கென்ஸ்ரக்சன்
- ஸம் ஸம் பாமஸி
- சோஷா நலன்புரிச் சங்கம்
- ஈறோ லங்கா
- டில்கா ஹாட்வெயார்

### எழுத்துரு கொண்டுவர உதவிய...

ஆர். அப்துல்லா அஸாம் *(அல் ஹசனாத்)*
எஸ்.எல்.எம். ஆஸாத் *(அல் ஹசனாத்)*

இன்னும் பெயர் குறிப்பிட மறந்த பல வழிகளிலும் உதவிய நண்பர்கள்

3008

## சமர்ப்பணம்

கொல்லப்பட்டு விரட்டப்பட்டு இன்னும் எவ்வாறான இழப்புக்களால் எல்லாம் முஸ்லிம் தேசம் அடையாளம் இடப்பட்டதோ அத்தனைக்கும் இந்நூல் அர்ப்பணம்

## வேலைத்திட்டம் பற்றி...

அக்கரைப்பற்றில் இதுவரைகாலமும் இனமுரண்பாடுகளால் கொல்லப்பட்ட காணாமல்போன அங்கவீனமுற்ற இன்னும் சொத்துக்களை இழந்த முஸ்லிம்களின் தகவல் திரட்டலும் முறையாய் ஆவணப்படுத்தலும் அவர்களை நினைவு கூர்தலும்.

முஸ்லிம் தேச இழப்பீட்டு ஆய்வு மையம் ஸ்தாபிக்கப்பட்டு தனது முதல் பணியாக இவ் ஆவணப்படுத்தலை "நமக்காக நாம் வேலைத்திட்டம் 01" என்று பெயரிட்டு களமிறங்கியது.

சர்வதேச மயப்பட்டுப்போன இலங்கையின் சமகால அரசியல் மிகவும் கூரான தளத்தில் இருந்து விமர்சிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை நோக்கி சிங்கள தமிழ் தேசங்கள் மிகத் தந்திரோபாயங்களோடு அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்திச் செல்கின்றன.

வடக்கு கிழக்கில் நேரடியாக இனப்பிரச்சினையோடு தொடர்புபட்ட, எக்காரணத்தாலும் புறக்கணிக்கப்பட முடியாத, எத்தனையோ ஆயிரம் உயிர்களை பலிகொடுத்த, காணாமல்ப்போன, அங்கவீனப்படுத்தப்பட்ட, கோடான கோடி சொத்துக்களை இழந்த, ஒட்டுமொத்தமாக இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்ட முஸ்லிம்களை சிங்கள தமிழ் தேசங்களுடன் சேர்ந்து, சர்வதேசமும் திட்டமிட்டு புறக்கணிப்பதை, ஏமாற்றுவதை முஸ்லிம்களாகிய நாம் இன்னும் விளங்காமல் இருக்க நியாயமில்லைதான்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை நோக்கி நெருங்கிய தருணத்திலும் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் ஒரு முக்கிய செல்வாக்குச் செலுத்தும் காரணியாக பார்க்கப்படாமை வேதனைக்குரியது. ஆபத்தானது.

இந்த சதியை உடைத்தெறியும் மிகப்பெரிய வேட்கையின், இலட்சியத்தின் சிறிய எடுப்பாக நமது சமூக அரங்கில் நமது நலன் வேண்டி இனப்பிரச்சினையோடு எங்களை முறையாக ஆவணப்படுத்திக்கொள்ள முதற்கட்டமாக அக்கரைப்பற்று பிரதேசத்தில், இனப்பிரச்சினையோடு தொடர்புபட்ட கொல்லப்பட்ட, காணாமல்போன, அங்கவீமுற்றவர்களது தகவல்களை இந்நூல் ஊடாக ஆவணப்படுத்தி இருக்கிறோம்.

05.06.2006ம் ஆண்டு இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதும் பல நெருக்குவாரங்களின் காரணமாக தாமதமாகியேனும் வெளிவருவதையிட்டு வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

*ஏ.எல். ஹமீனுல்லாஹ் (Dip. in Journalism)*
*அமைப்பாளர்*
*முஸ்லிம் தேச இழப்பீட்டு ஆய்வு மையம்*
*E-mail : alhameenullah@yahoo.com*

*15.03.2008*

3008

## மனதார ஒரு மடல்...

எமது இவ்வேலைத்திட்டம் நடைமுறையில் இருந்த காலப் பகுதியில் பல அசௌகரியங்களை தாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அத்தனை மனவலிக்கும் இம்மடல் ஒரு ஒத்தடம். இது ஓய்வுபெற்ற ஒரு ஆசிரியர் எமது வேலைத்திட்டத்தை ஆதரித்து தபாலில் அனுப்பிய கடிதம். பொருத்தம் குறித்து பிரசுரிக்கப்படுகிறது.

**M.S. ABUL HASSEN** J.P, SLPS - I
Retd. Asst. Director of Education

"Dhaarul Karam"
207/1, Fiscal Road,
Akkaraipattu - 02.
☎: 067 - 2277125

Date: 10-06-06

அன்புடையீர்,

அஸ்ஸலாமு அலைக்கும்!

நலத்தாக நாடும் வேலைத்திட்டம்!

என்ற தலைப்பிலான இன்று தாங்கள் வெளி
யிட்டுள்ள பிரசுரம் இன்று எனது கரம்
கிடைக்கப் பெற்றது. அதை வாசித்ததும் நீங்கள்
பட்ட அவஸ்தைகள் என்னைப் பெரிதும்
கவர்ந்துவிட்டன. காலத்தின் தேவை
அறிந்து தக்க நிதானத்துடன் ஆரம்பித்த
உங்கள் இம் மகத்தான பணி பெருவெற்றி
யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மக்கள் சேவை மகேசன் சேவை
என்பர். இதைத் தட்டிக்கழிப்பவர்கள் மக்கள்
சேவைக்கு ஏற்கப்பட்டவர்களாக இருப்பார்
களா? என்ற கேள்வி என்னுள் அடிக்
கடி தோன்றும். அந்த அளவுக்கு வேலை
த்தீ மக்கள் பலிக்காத மனஉளைச்
சலுக்கு வேதனைப்படும் நான் பட்டு
வருகின்றேன். இது அனுபவம் பேசுகிறது என்று
வைத்துக் கொள்ளுங்களேன்.

நாம் வைத்துக் கொண்ட
டி புதிதான பணி வென்று நிச்சய
மாக வெற்றி கிடைக்கும். இது தெளிவானது.

ஒரு தாய் குழந்தை உண்டானதை
தானறிந்து அதைப் பெற்றெடுக்கும் வரை [illegible]
யில் அவள் படும் வேதனை, குழந்தை
யைப் பெற்று விட்டால் அவள் அடை
யும் மகிழ்ச்சி அளவிடமுடியாதது.
அவள் பட்ட வேதனை அவளுக்கு
ஞாபகம் வருவதில்லை.

அதே போல இந்த சமூக
பணியில் நான் ஈடுபடும் போது
வினை அனைத்தும், அவ்வப்
பல வேறு விதமான கஷ்டங்களை
விரக்தி, வேதனை என்பனவெல்லாம்
ஏற்படும். அதை பொறுத்தால்
தமது இலட்சியத்தை அடைந்து
முனைப்பாகச் செயல்பட்டால்
உங்களுக்கு வெற்றி நிச்சயம்.
"சாதி வினை யாவும் இருக்கலாம்
வந்தாலும்
நான் மனம் தளரமாட்டேன்"
என்ற பாடலின் கருத்தை இதற்கு
பிறகு நடைபோட்டு முன்னேறி வெற்றி
பெற மீண்டும் இறை வழுத்துகிறேன்.

குறிப்பு
இது ஒரு பொன்னாக்கின் [illegible]
நன்கொடை.

என்றென்றும் [illegible]
தங்களின் வெற்றியை
விரும்பும்
[illegible signature]

## சாட்சியங்களை வைத்து...

பிஸ்மில்லாஹிர்றர்மானிர்ரஹீம்.

சுதந்திரத்திற்கு பிற்பட்ட இலங்கையில் சிறுபான்மை மீதான நெருக்குவாரங்கள் பரந்தளவில் வெளிக்கொணரப்பட்டாலும், அன்னியர் படையெடுப்பு காலப்பகுதியிலேயே முஸ்லிம்கள் குறிப்பாக இன ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது வரலாறுகளில் இருந்து தெளிவு...

முறையான சமூக கட்டுமானமும், ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகளும் முஸ்லிம்களின் சமூக தளங்களில் அமையப்பெறாமை இன்றுவரை ஒடுக்கும் வர்க்கத்துக்கு ஏதுவாய்ப்போயின. இது கதை...

சிங்களப் பேரினவாதத்தின் கோதா சிறுபான்மையினர் மீது கட்டுமீறிப் பாய்ந்ததன் எதிர் விளைவு 1950க்கு பிறகு, ஜனநாயக போராட்டங்களில் திளைத்திருந்த தமிழர்கள் நம்பிக்கையற்று 1980களில் ஆயுதப் போராட்டத்தில் நாட்டம் செலுத்தி இன்று அது தனது இறுதி அத்தியாயத்தில் ஊன்றி நிற்கிறது.

சிங்களப் பேரினவாதத்தின் சிறுபான்மையை ஒடுக்கும் நிகழ்ச்சி நிரலில் முஸ்லிம்களும் தமிழர்களும் சமாந்தரமாகவே பார்க்கப்பட்டனர். ஆயினும் ஏலவே உறுதியான அரசியல் பார்வைகளும், அமைப்பாக்கமும் தமிழர்களிடம் இருந்ததால் நேர்த்தியான புரிதலும் மாற்று நடவடிக்கைகளும் தமிழர் தரப்பால் காலத்திற்கு காலம் அரங்கேறிக்கொண்டேயிருந்த அதே சமயம் வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம்களின்அரசியல் பரிமாணம், புவியியல் அமைப்பு, எதிர்காலம் என்றெல்லாம்

எதுவும் அறியாமல் வெறுமனே சிங்கள ஆங்கில மொழியறிவோடு மாத்திரம் தெற்கின் அன்றைய முஸ்லிம் தலைமைகள் பேரினவாதிகளோடு சங்கமமாகி வடக்கு கிழக்கின் மேட்டுக்குடிகளையும் தன்னகத்தே ஈர்த்து படைவைத்தமை இன்றுவரையான முஸ்லிம்களின் அரசியல் பூச்சிய நிலைக்கு அத்திவாரம் இட்டதெனலாம்....

1980களுக்கு பிற்பாடு தமிழர்களின் ஆயுதம் தாங்கலான போராட்டம் மண்ணை (வடக்கு கிழக்கு) காப்பாற்றுவதற்கான தொனியில் எதிரொலித்தது. சிங்களத்தின் திட்டமிட்ட குடியேற்றங்கள், இன மொழி ரீதியான ஒடுக்கு முறைகள் தமிழ் ஆயுத தாரிகளின் எடுப்புக்களுக்கு நியாயம் கற்பித்தது.

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் வெறுமனே பார்வையாளர்களாக இருந்துவிடாமல் பங்காளிகளாகுங்கள் என்ற கோசம் தமிழ் ஆயுதக் குழுக்களால் முஸ்லிம் இளைஞர்களின் இதயங்களிலே வேகமாக பாய்ச்சப்பட்டது.

மாற்றுவழிக்கான தெரிவுகள் இல்லாமையாலும், சிங்கள நிலச்சுரண்டலை நேருக்கு நேர் அனுபவித்தமையாலும் ஒரே தேசத்தை அடிப்படையாகக் கொண்டமையாலும் இன்றும் தமிழ் என்கின்ற மொழி முறையான உறவுகளாலும் முஸ்லிம் இளைஞர்கள் தமிழ் ஆயுதக் குழுக்களோடு இரண்டறக் கலந்தனர். அன்று பிரபல்யமான இயக்கங்களோடு இணைந்த முஸ்லிம் போராளிகள் தாங்கள் சார்ந்த இயக்கங்களுக்கு முஸ்லிம் இளைஞர்களை வேகமாகத் திரட்டினர்.

**அன்றய சூழ்நிலையில் தமிழ் இயக்கங்களில் இணைந்த எல்லா முஸ்லிம் இளைஞர்களையும் முஸ்லிம் தேச விடுதலைப் போராளியாகவே பார்க்க வேண்டும்.** ஏனெனில் அன்று தமிழர்கள் கேட்டுப் போராடிய அதே நிலத்தில் முஸ்லிம் தேசமும் உள்வாங்கப்பட்டிருந்தது.

இராணுவம் இயக்க உறுப்பினர்களைத் தேடி "மண்டைபோடும்" நடவடிக்கையில் இறங்கியபோது முஸ்லிம் பிரதேசத்தில் உள்ள சகல முஸ்லிம்களும் இயக்கப் போராளிகளை (அவர்கள் தமிழ் சகோதரர்களோ முஸ்லிம்களோ) மறைத்துவைத்து காப்பாற்றி இன்னும் ஆதரவளித்துமே வந்தனர். (இதனை புரிந்துகொண்டால் அன்று தமிழ் இயக்கங்களில் இருந்த முஸ்லிம் இளைஞர்கள் முஸ்லிம் தேசத்திற்கான விடுதலைப் போராளிகளாகவே பார்க்கப்பட்டனர் என்பதனை இலகுவில் புரிந்துகொள்ள முடியும்)

காலப்போக்கில் இஸ்திரத்தன்மை அடைந்த தமிழ் இயக்கங்கள் தத்தம் அமைப்புகளை மேலோங்கச்செய்யும் நோக்கில் சகோதரப்படுகொலையில் நாட்டம் கொண்டது. மாற்று இயக்க உறுப்பினர்களை கொன்றொழிக்கும் முயற்சியில் முற்றாக இறங்கியது.

பின் இயக்கவயப்பட்டுப்போன முஸ்லிம் இளைஞர்களும் தம் தலைமைகளுக்கு

கட்டுப்பட்டு மாற்று இயக்க முஸ்லிம் இளைஞர்களை கொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டனர். (காக்காவை தம்பி காட்டிக்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டது) இது முஸ்லிம் பொதுமக்களிடையே போராளிக் குழுக்கள்மீது வித்தியாசமான பார்வையினை செலுத்தவேண்டிய நிலைக்கு எழுந்தமாகத் தள்ளியது...

முஸ்லிம் இளைஞர்களை முற்று முழுவதாக பயன்படுத்தி நிறுவனமயப்பட்ட தமிழ் இயக்கங்கள் தமது நீண்ட நாள் திட்டத்தை மனவறைகளில் இறுக்கிவைத்த மிலேச்சத்தனத்தை அரங்கேற்றியது. இயக்கங்களில் இருந்த முஸ்லிம் உறுப்பினர்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

சிங்கள பேரினவாதத்தைவிட பன்மடங்கு அதிகமாக, வேகமாக தமிழ் மேலாதிக்க வாடை வீசுவதை உணர்ந்த முஸ்லிம்கள், உந்துணர்ச்சி பெற்றவர்கள் விரைவாக இயக்கமயமாகவேண்டிய தேவை ஏற்பட்டது. ஏலவே இதற்கான தயாரிப்புகளில் இயங்கிய எல்லோருடைய கூட்டும் மர்ஹூம் அஷ்ரஃபுடைய தலைமையில் முஸ்லிம் காங்கிரஸின் கீழ்த் திடீர் திரட்டாய் ஆனது.

இலங்கை இந்திய ஒப்பந்தம்! இணைந்த வட கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸ் குதிப்பு! புலிகளின் கையோங்கல்! வடக்கில் இருந்து இருமணி நேரத்திற்குள் முஸ்லிம்கள் ஒட்டுமொத்தமாய் புலிகளால் விரட்டப்படல்! சோளம் பொரிவதுபோல் அடுத்தடுத்து இடம்பெற்றன.

நிராயுதபாணியான முஸ்லிம்கள் கையறு நிலையில் அகதியாகவும், அடக்கப்பட்டவராகவும் ஆயினர். தொடர்ந்தது தொடர்ந்துகொண்டே இருக்கிறது. விடுதலையை சுதந்திரத்தை வேண்டி நிற்கும் ஒரு சமூகம் அல்லது ஒரு அமைப்பு முதலில் உருக்கமான ஜனநாயக போராட்டத்தை மேற்கொள்வதும் இயலாதபட்சத்தில் மக்கள் எழுச்சியை ஏற்படுத்தி ஆகுமான போராட்டங்களில் ஈடுபடுவதும், அதுவும் கைகூடாது போனால் வெற்றி அல்லது வீர மரணம் என்ற விதிக்குள் உள்வாங்கப்படுவதும் தான் வரலாற்று ஒழுங்குமுறை.

ஆனால், முஸ்லிம்களின், குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் விடுதலைக்காக களமிறங்கிய முஸ்லிம் காங்கிரஸ் 1987களில் இயங்கி ஒரு தசாப்தத்திற்குள் பேரினவாதத்திடம் சரணாகதியடைந்த துரோகத்தனத்தினால் முஸ்லிம்களுடைய போராட்டம் மீண்டும் பூஜ்ஜியமானது.

ஒரு தலைவருடைய திராணி, கொள்ளளவு அத்தலைவர் மரணித்ததன் பின் அந்நிறுவனும் கொண்டுசெல்லப்படும் முறையில் இருந்து புரிந்துகொள்ள முடியும் என்ற ஒரு வரலாற்று வாசகத்தில் இருந்து முஸ்லிம் காங்கிரசின் தலைமையையும் அன்றைய இன்றைய அதன் நிலைமைகளையும் புரிந்துகொள்ள முடியும்.

ஒரு அரசியல் பகடி என்னவென்றால் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுடைய

விடுதலையை பெற்றுத்தராது என்று சொல்லி அதிலிருந்து பிரிந்தவர்களும் தங்களது அம்மணங்களை மறைக்க 'அலமுடி' கட்டி மீண்டும் ஒரு கொந்தறாத்து சமுகத்தை பேரினவாதிகளோடு சேர்ந்து கட்டிக்கொண்டிருப்பதுதான்.

புளியமரத்தில் பழுத்து இனிப்பதெப்படி.... முறையாக ஆய்வுசெய்யும்போது முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுடைய திடீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு செய்யப்பட்ட உடனடி தயாரிப்பு. ஒரே கேள்வியோடு இருந்த மக்கள் கூட்டத்திற்கு கட்டப்பட்ட வேலி... வேலியே பயிரை மேய்ந்தது பின்னாளில்....

திட்டமிடப்பட்டு முறையாக ஒழுங்கு படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்குமானால் முஸ்லிம் காங்கிரசிற்கு இப்படியொரு பரிதாப நிலை வந்திருக்காது. என்னதான் இருந்தாலும் இன்னும் ஓரிரு தசாப்தத்தில் ஈமானியத்தோடு கூடிய ஒரு முஸ்லிம் விடுதலை அமைப்பை காணக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படத்தான் செய்கின்றன. அந்த இலட்சியத்தை நோக்கி பயணிக்க வேண்டியவர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டிய ஒரு விபத்திப்புள்ளி மார்க்கப் பிரிவினைகள். எவ்வளவு முரண்பாடுகள்தான் இருந்தாலும், முஸ்லிம் என்ற அடைப்பிற்குள் எல்லோரையும் சேர்த்து எல்லோருடனும் சார்ந்து இப்பொழுதிலிருந்தே விடுதலைக்குச் சமாந்தரமாக இந்த வேலைத்திட்டத்தையும் மிக முக்கியமாகச் செய்ய வேண்டும் அல்லாது போனால் மேற்கத்திய வாதம் ஈராக்கில் விளையாடுவதுபோலவும் ஈழப்போராட்டத்தில் தமிழ் குழுக்கள் பிரிந்து தங்களுக்குள் சகோதரப் படுகொலை செய்வது போலவும் முஸ்லிம் தேசத்திலும் ஒரு அவல நிலை தோன்றக்கூடும். கவனம்! மிகக் கவனம்!

விடுதலையின் வேர்களான முஸ்லிம் இளைஞர்களின் தோள்களில் சீதனம் என்கின்ற இறங்காச் சுமையை நம் சமுகம் கட்டிவைத்திருக்கிறது. தன் சகோதரியின் சீதனத்திற்காக உழைக்க அவனது ஆயுளில் அரைவாசி போய்விடும், பின் அவன் குழந்தையின் சீதனத்திற்காக உழைக்கும்போது ஆயுளே போய்விடும்.

ஆக சமூகம் குறித்து சிந்திப்பதற்கு நம் இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் இல்லாமல் பண்ணுவதும் நாம் இருக்கின்ற இந்த சமுக வட்டம்தான். நம் எதிரிகளில் ஒருவனுக்கு குறிவைப்பதை விடவும் நம்மில் சீதனத்திற்கு உடந்தையானவர்களுக்கு குறிவைப்பது நம் விடுதலையை விரைவுபடுத்தும்.

மரணத்திற்கு பிற்பாடே நிலையான வாழ்க்கை என்கின்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுகம் (முஸ்லிம் தேசம்) அற்ப வாழ்வியல் காலத்தில் அடிமையாக இருப்பதென்பதை என்ன சொல்வது...

இவை எழுத நினைத்தவை...

இனி, இங்கு ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்ற வேலைத்திட்டம் குறித்து சொல்லப்பட வேண்டும். 1980களிற்கு பிற்பாடு இனமுரண்பாடுகளால் கொல்லப்பட்ட காணாமல்போன அங்கவீனமுற்ற காயமடைந்த அக்கரைப்பற்று முஸ்லிம்

சகோதரர்களின் தொகுப்பு இது. இதில் உள்ள குறிப்புக்கள் அந்தக் கால சூழ்நிலையில் இருந்துதான் விளங்கப்பட வேண்டும். சார்பு நிலையாக அல்லது வெறுமனே தொழில் ரீதியாக முஸ்லிம்களின் சில ஆவணத் திரட்டல்கள் இருந்தாலும், அது மக்களிடம் சென்றடையும் விதத்தில் இல்லை. அந்த இடைவெளியை நிரப்பும் ஒரு சிறு எடுப்பாகவே இந்த வேலைத்திட்டத்தை 'நமக்காக நாம் வேலைத்திட்டம் - 01' என்ற பெயரில் நாம் களம் நின்று செய்து முடித்தோம்.

இது மாத்திரமன்றி சொத்துக்களின் இழப்புகளும் உயிர் இழப்புகளும் ஆவணமாக எல்லா முஸ்லிம் பிரதேசங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது.

இங்கு கொல்லப்பட்டவர்களின் பேரில், விரட்டப்பட்டவர்களின் பேரில்தான் முஸ்லிம் அரசியல் சக்கரம் ஆரம்பித்து ஆடத் தொடங்கியது. ஆடுகிறது. ஆனபோதும் இவர்களில் எத்தனை பேர் இந்த இழப்புகளை ஈடுகட்ட முடியாமல் அழுது புலம்புகிறார்கள் என்பது அவர்களுடன் களம் நின்று உரையாடிய அனுபவத்தில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது. "வாப்பாவ வெளிக்குள்ள சுட்டுப்போட்டானுகள்" என்ற அதிர்ச்சியில் இன்னும் விடுபடாமல் மனநோயாளியான மகன், தந்தை சகோதரர்கள் கொல்லப்பட்டதால் வாழ்வாதார வழியின்றி வயதுக்கு வந்தும் வாழாவெட்டியாக இருக்கின்ற பெண் பிள்ளைகள். இன்னும் எத்தனையோ கதைகள்...


கனவான்களே! ஊர்ப்பெரியார்களே! சமூக சேவை நிறுவனங்களே இப்புத்தகத்திற்குள் அடைபட்டிருக்கும் இவர்களை இனம்கண்டு உதவுங்கள்.

இந்த வேலைத்திட்டத்தில் பங்கெடுத்த எல்லாத் தரப்பினருக்கும் மனதார நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். இப்பணியிடையில் தனிப்பட்ட யாருடைய மனமும் புண்பட்டிருந்தால் மன்னிக்கவும்.

இந்நூலின் உள்ளே அடிக்குறிப்பிடப்பட்ட தகவல்கள் பாதிக்கப்பட்ட அவர்களது உறவினர்களிடமிருந்து பெறப்பட்டவையாகும். அதில் ஏதேனும் தவறுகள் இருப்பின் எம்மோடு தொடர்புகொண்டு தெரிவிக்கும்பட்சத்தில் எமது மறுபதிப்பில் திருத்திக்கொள்வதோடு, நன்றியுடையவராயும் இருப்போம்.

இவ்வண்ணம்,
ஏ.எல். நௌஷாத்
ஸ்தாபகர்
முஸ்லிம் தேச இழப்பீட்டு ஆய்வு மையம்
18. 03. 2008

இலங்கை தேசப்படத்தில் அக்கரைப்பற்றின் அமைவிடம்.



## அக்கரைப்பற்று பிரதேசத்தின் எல்லைக் கோடுகள்



## கொல்லப்பட்ட திகதிகளுக்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்ட சாட்சியமாகும் உயிர்களின் பட்டியல்

01

**பெயர்:** சின்னலெப்பை அஹமது முகைதீன்

**விலாசம்:** புறட்வே வீதி, அக்கரைப்பற்று - 01,

**பிறந்த திகதி:** 17 - 04 - 1960

**கொல்லப்பட்ட திகதி:** 14 - 04 - 1984

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** தமிழ்ப் பயங்கரவாதிகளால்

**தகவல்:** சகோதரி சஹாரா உம்மா

*- குறித்த ஆயுதக் குழு அடித்துக் காயப்படுத்தி வைத்தியசாலையில் உயிருடன் வைத்து பின் அங்கிருந்து எடுத்துச் சென்று கொல்லப்பட்டார்.*



**பெயர்:** முஹம்மது இப்றாஹிம் ஆதம்பாவா

**விலாசம்:** 151, புதுப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று - 05.

**பிறந்த திகதி:** 08 - 06 - 1939

**கொல்லப்பட்ட திகதி:** 27 - 12 - 1984

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** தமிழ்ப் பயங்கரவாதிகளால்

**தகவல்:** மனைவி சுல்தான் பிவி

*- EPRLF இனரால் எடுத்துச் செல்லப்பட்டு அக்கரைப்பற்று பழைய சந்தைச் சுற்று வட்டத்திற்கு அருகாமையில் சுட்டுக்கொல்லப்பட்டார்.*

03

**பெயர்:** அகமது லெவ்வை அலித்தம்பி

**விலாசம்:** 115, கடற்கரை வீதி, சின்ன முகத்துவாரம், அக்கரைப்பற்று - 09


**பிறந்த திகதி:** 1930

**கொல்லப்பட்ட திகதி:** 1985-04-14

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** தமிழ்ப் பயங்கரவாதிகளால்

**தகவல்:** அலித்தம்பி நாகூர்த்தம்பி

*- மீனவரான இவருடைய உடமைகள் முழுதாக சூறையாடப்பட்டு சின்ன முகத்துவாரம் அக்கரைப்பற்று 9 எனும் அவருடைய வசிப்பிடத்தில் வைத்து கொல்லப்பட்டார். சின்ன முகத்துவார இறங்குதுறையை மையமாக வைத்து அப்பிரதேசத்தில் இருந்த முஸ்லிம்களை இனச்சுத்திகரிப்புச் செய்யும் முதல் நடவடிக்கையிது.*



**பெயர்:** முகம்மது அபூபக்கர் முகம்மது இப்றாஹீம்

**விலாசம்:** 182, யூனியன் வீதி, அக்கரைப் பற்று - 01

**பிறந்த திகதி:** 1942-10-25

**கொல்லப்பட்ட திகதி:** 1985-04-14

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** தமிழ்ப் பயங்கரவாதிகளால்

**தகவல்:** மனைவி

*- ஆசிரியரான இவர் பனங்காட்டிலுள்ள தனது வயல்வெளிக்குச் சென்றபோது தமிழ் ஆயுதக் குழுவால் கொல்லப்பட்டார்.*

05

பெயர்: முகமட் முஸ்தபா நவாஸ் (டியூக்ஸ் தோழர்)

விலாசம்: பழைய பொலிஸ் வீதி, அக்கரைப்பற்று - 01


பிறந்த திகதி: ---

கொல்லப்பட்ட திகதி: 1985-04-14

யாரால் நிகழ்த்தப்பட்டது: பொலிஸாரால்

தகவல்: நண்பர்

*- EPRLF உறுப்பினரான இவர் பொலிசாரால் அக்கரைப்பற்று சந்தைச் சதுக்கத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.*



பெயர்: இப்றாலெப்பை அஹமது லெப்பை

விலாசம்: 222/2, பிஸ்கால் வீதி, அக்கரைப்பற்று-2

பிறந்த திகதி: 1946-04-19

கொல்லப்பட்ட திகதி: 1985-04-15

யாரால் நிகழ்த்தப்பட்டது: தமிழ்ப் பயங்கரவாதிகளால்

தகவல்: மு.இ.சுபைதா

*- பொத்துவில் தகரம்பளயில் தனது மாட்டுப் பண்ணையை பார்க்கச் சென்றபோது, தமிழ் பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்டார்.*

## புட்டம்பையில் நடந்த கொடூரம்

அக்கரைப்பற்றிலிருந்து சுமார் 4 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள புட்டம்பை என்ற முஸ்லிம் கிராமம் 150 வருட வரலாற்று இருப்பைக்கொண்டது. இப்பிரதேசத்தில் 300க்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. இங்கு பள்ளிவாசல்கள் உட்பட சகல முஸ்லிம் கலாசார அடையாளங்களும் ஒருங்கே அமைந்திருந்தன.

புறச்சூழல் தமிழ் பிரதேசங்களால் அரணிடப்பட்டிருந்தாலும், முஸ்லிம்களுடைய ஏராளமான காணிகள் அப்பிரதேசம் சார்ந்து காணப்பட்டதால், அவர்களது வாழ்வாதாரம் சுமுகமாக இருந்ததோடு முஸ்லிம்களது காணிகளுக்கும் பாதுகாப்பான ஏதுவாக இருந்தது.

1985.04.15ல் தமிழ் பாசிசவாதம் புட்டம்பை முஸ்லிம் மக்களை ஒட்டுமொத்தமாக கொன்றொழிப்பதோடு அக்கரைப்பற்றின் ஒரு வாயற்கதவை தாழ்பாளிடவும் திட்டமிட்டது.

தெய்வாதீனமாக தகவல் அறிந்த முஸ்லிம்கள் ஓட்டமும் நடையுமாக அக்கரைப்பற்றுக் கடற்கரையோரங்களில் அகதியானார்கள். தப்பியோடுவதற்குக் கூட திராணி இல்லாத 9 பேரைக்கொண்ட இந்த ஏழைக்குடும்பத்தை தாய், தந்தை, பிள்ளைகள், சின்னஞ் சிறார்கள் என ஈவிரக்கமின்றி கொன்றும் பற்றவைத்தும் தனது இனவெறியை தமிழ் பாசிசவாதம் அரங்கேற்றியது. இதோ அவர்களது பெயர்களும் விபரங்களும்.

கண்ணீரோடு சொல்கிறார் தப்பிய குடும்ப அங்கத்தவர்களில் ஒருவரான ஆதம்பாவா கதீஜா உம்மா....

| | | | |
|---|---|---|---|
| 01. | உதுமாலெவ்வை ஆதம்பாவா | - வயது 65 | தந்தை |
| 02. | முகிதீன் பாவா செய்னம்பு | - 1940.08.12 | தாய் |
| 03. | ஆதம்பாவா றகீமா | - 1966.11.08 | மகள் |
| 04. | ஆதம்பாவா யூசுப் லெவ்வை | - 1968.08.29 | மகன் |
| 05. | ஆதம்பாவா உதுமாலெவ்வை | - 1971.01.28 | மகன் |
| 06. | ஆதம்பாவா முகம்மத்தம்பி | - 1971.01.28 | மகன் (இரட்டையர்கள்) |
| 07. | ஆதம்பாவா ஆயிஸா பீவி | - 1975.01.27 | மகள் |
| 08. | ஆதம்பாவா ஜூனைதீன் | - 1977.02.10 | மகன் |
| 09. | ஆதம்பாவா அயாத்து முகம்மது | - வயது 5 | மகன் |

*அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் இக்கூட்டுக்கொலை குறித்து பதிவுசெய்யப்பட்ட ஆவணத்தின் பிரதி...*

True Extract of the C.I.B.1 taken from the Police Station,
<u>Akkaraipattu</u>

Date:-[illegible] Time:-10:25... Page:-..105.... Para:-..69.....

**For Future Reference**

Athambawa Kathisaumma, age 35 years, female, Muslim, Islam, Sri Lankan Moor, housewife, residing at Hijira Street (No.186) Akkaraipattu -01, present at the Police Station, Akkaraipattu and states thus: Due to the terrorists activities erupted on 15.04.1985, I came from Puttambai, where I was living with my parents and family, but my parents and family did not return from there to Akkaraipattu. When I went with the help of my relatives, namely. M.Abubucker and A.M. Haniffa, to Puttambai on 19.04.1985, I found that the following have been brutally chopped and killed. With the help of the relatives who came with me I buried the bodies of:-.............................

1. Uthumalebbe Athambawa, age 65 years (father)
2. Mohideenbawa Zainambu (D.O.B. 1940.08.12) Mother
3. Athambawa Rahima (D.O.B. 1966.11.18) sister
4. Athambawa Yoosufflebbe(D.O.B. 1968.08.29) brother
5. Athambawa Uthumalebbe (D.O.B. 1971.01.28) brother
6. Athambawa Mohamedthamby ( D.o.B.1971.01.28) brother
7. Athambawa Ayisha Beebi ( D.o.B. 1975.01.27) sister
8. Athambawa Junaideen( D.O.B. 1977.02.10) brother
9. Athambawa Ayathu Mohamed ( age 5 at the time of death) Bro.

at the same spot at Puttambai and returned home. I make this complaint to my fture reference and to obtain assistance from the government, Read over and explained, admitted correct set signature ....... [illegible]. I, PC/RPC [illegible]..... do hereby certify that the above complaint has been honestly and accuratelу and correcly recorded by me..[illegible].................................

I, do hereby certify that the foregoing is a true extract of the C.I.B.1 of Police Station, Akkaraipattu, of which the original is in my personal custody.

10.00

Officer-In-Charge
Police Station,
Akkaraipattu,

16

**பெயர்:** அபூசாலி அப்துல் மலிக்

**விலாசம்:** 135, பிரதான வீதி, அக்கரைப்பற்று.

**பிறந்த திகதி:** 1960-06-18

**கொல்லப்பட்ட திகதி:** 1985-04-28

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** பொலிஸாரால்

**தகவல்:** கே.எம். செய்யது பாத்தும்மா

*- EPRLF உறுப்பினரான இவர் பொலிஸாரால் அக்கரைப்பற்று சந்தை சதுக்கத்தில் வைத்து கொல்லப்பட்டார்.*

17

**பெயர்:** சேகு இஸ்மாயில் றாசிக்

**விலாசம்:** 179, வடிகால் வீதி, அக்கரைப்பற்று-01,


**பிறந்த திகதி:** 1960/10/09

**கொல்லப்பட்ட திகதி:** 1985/09/16

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** தமிழ்ப் பயங்கரவாதிகளால்

**தகவல்:** இஸ்மாயில் நாகூரும்மா

*- வண்டில் மாடு உரிமையாளரான இவர் வண்ணார வட்டை குளத்தடியில் வைத்து கொல்லப்பட்டார்*



**பெயர்:** முகம்மது இஸ்மாயில் - ஆரிபின்

**விலாசம்:** 129-பீ, புதுப்பள்ளிவீதி, அக்கரைப்பற்று-04


**பிறந்த திகதி:** 1961-09-21

**கொல்லப்பட்ட திகதி:** 1986-03-19

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** தமிழ்ப் பயங்கரவாதிகளால்

**தகவல்:** அல்-ஹாஜ் எம்.ஐ.அகமது லெவ்வை (ஹனீபா)

*- அரசாங்க முந்திரிகை பண்ணை உதவி அத்தியட்சகரான இவர் மன்னாரில் தொழிலகத்திற்கு வாகனத்தில் செல்லும்போது கொல்லப்பட்டார்.*



பெயர்: முஹம்மட் ஹாஸிம் மொஹம்மட் ராபி

விலாசம்: பிரதான வீதி, அக்கரைப்பற்று - 02

பிறந்த திகதி: 1962-08-26

கொல்லப்பட்ட திகதி: 1986-04-17

யாரால் நிகழ்த்தப்பட்டது: ஈரோஸ் இயக்கத்தால்

தகவல் : Z.M. நபீல் ஆசிரியர்

- 1962.08.26ம் திகதி அக்கரைப்பற்றில் பிறந்தார். தனது கல்வியை அக்கரைப்பற்று ஆண்கள் வித்தியாலயம், அக். முஸ்லிம் மத்திய கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்தா, யாழ் மகாஜனக் கல்லூரிகளில் பயின்றார்.

1982ம் ஆண்டு காலப்பகுதிகளில் EPRLF ல் தன்னை இணைத்துக் கொண்டதோடு, இந்தியாவில் போர்ப் பயிற்சியும் பெற்றார். 1983ம் ஆண்டு EPRLF அமைப்பினரால் மேலதிக பயிற்சிக்கென பலஸ்தீனத்திற்கு அனுப்பப்பட்ட குழுவில் இடம்பெற்றார். பாலஸ்தீனத்தில் பயிற்சிக் காலங்களில் இவர் காட்டிய உத்வேகம் தந்திரோபாயங்கள் காரணமாக விசேட பயிற்சிகள் பெற்றதுடன் கேணல் தரம் Rank வழங்கப்பட்டது.

EPRLF அமைப்பின் தலைவர் பத்மநாபாவின் நம்பிக்கைக்குரியவராய் திகழ்ந்த ராபி 1984ம் ஆண்டு கிழக்கு மாகாண முஸ்லிம் பிரிவிற்கான தளபதியாக நியமிக்கப்பட்டார். இவரின் தலைமையில் நூற்றுக்கும் அதிகமான முஸ்லிம் இளைஞர்கள் EPRLF அமைப்பில் போர்ப்பயிற்சி பெற்றனர்.


1985ல் அக்கரைப்பற்றில் ஏற்பட்ட தமிழ் முஸ்லிம் கலவரம் கிழக்கு மாகாணம் முழுவதும் பரவியது. முஸ்லிம்களின் பொருளாதாரத்தை அழிக்கும் நோக்குடன் அக்கரைப்பற்று பொதுச்சந்தை EPRLF, TELO, ஈரோஸ், புளட் அமைப்புக்களின் கூட்டு முயற்சியுடன் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதுடன் தீயிட்டும் கொழுத்தப்பட்டது. முஸ்லிம்கள் பலர் கொல்லப்பட்டனர்.

தமிழ் இயக்கங்களின் கடந்தகால நடவடிக்கைகள் இனப்படுகொலைகள் அவர்களின் ஊறிப்போய் இருக்கின்ற கபடத்தனமான எண்ணங்கள் என்றாவது ஒருநாள் முஸ்லிம்களை அகதிகளாக்கும் என்று சிந்தித்த ராபி இதற்கு மாற்று வழியாக முஸ்லிம் இராணுவ அமைப்பொன்றை நிறுவுவதே ஒரே வழியெனத் தீர்மானித்தார்.

1985ன் நடுப்பகுதியில் 'அல் பதாஹ் இயக்கத்தினை ஆரம்பித்தார். தமிழ் இயக்கங்களில் சிதறுண்டு கிடந்த முஸ்லிம் இளைஞர்களை தனது இயக்கத்தில் இணைத்துக் கொண்டார். ராபியின் நடவடிக்கையினால் ஆத்திரம் கொண்ட தமிழ் இயக்கங்கள் ராபியை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என்று திட்டம் தீட்டினர். ஈரோஸ் அமைப்பாலும் EPRLF அமைப்பாலும் ராபியைக் கொல்ல பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் முறியடிக்கப்பட்டன.

1986.04.17 நோன்பு 8ம் நாள் இரவு 8.20 மணியளவில் ராபியின் பாலிய வயது சினேகிதர் நபீலின் அக்கரைப்பற்று இல்லத்தில் வைத்து ஈரோஸ் இயக்கத்தினரால் ஒழிந்திருந்து சுடப்பட்டு மரணமானார்.

**- இக்குறிப்பு அவரது நண்பர் நபீல் ஆசிரியரினால் வழங்கப்பட்டது.**



**பெயர்:** ஆதம் பாவா சாலித்தம்பி ஆதம் லெவ்வை

**விலாசம்:** 60பீ, மத்தியவீதி, நகர்பிரிவு - 05, அக்கரைப்பற்று - 1

**பிறந்த திகதி:** 1964-03,04

**கொல்லப்பட்ட திகதி:** 1986-06-15

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** STF ஆல்

**தகவல்:** ஏ.பீ, அலித்தம்பி

*- ஈரோஸ் இயக்க உறுப்பினரான இவர் அக்கரைப்பற்று ஆர்கேஎம் பாடசாலை அருகாமையில் வைத்து STF ஆல் கொல்லப்பட்டார். இவர் பூஸா முகாமிலும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.*

21

**பெயர்:** உதுமாலெப்பை நாகூர் மீரா லெப்பை

**விலாசம்:** 254 அலியா மரிக்கார் வீதி அக்கரைப்பற்று 6

**பிறந்த திகதி:** --

**கொல்லப்பட்ட திகதி:** 1986.10.20

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** தமிழ்ப் பயங்கரவாதிகளால்

**தகவல்:** உமறு லெவ்பை அவ்வாக்குட்டி

*- உடும்பன் குளத்திற்கு வியாபாரத்திற்கு சென்றபோது கொல்லப்பட்டார். ஜனாஸா கிடைக்க்வில்லை.*

22

**பெயர்:** அபுபக்கர் லெப்பை சுலைமான் லெப்பை

**விலாசம்:** 179, முதலியார் வீதி, அக்கரைப்பற்று-04


**பிறந்த திகதி:**

**கொல்லப்பட்ட திகதி:** 1986-10-18

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** தமிழ்ப் பயங்கரவாதிகளால்

**தகவல்:** சுலைமா லெப்பை முஹம்மட் உவைஸ்

*- வியாபார நிமித்தமாக தமிழ் பிரதேசத்திற்கு சென்றபோது.*



**பெயர்:** இப்றாஹீம் முகம்மது ஹனீபா

**விலாசம்:** 158/2, ஹிஜ்ரா வீதி, நகர் பிரிவு - 01, அக்கரைப்பற்று - 01

**பிறந்த திகதி:** 1959-05-12

**கொல்லப்பட்ட திகதி:** 1987-01-07

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** இராணுவத்தால்

**தகவல்:** இஸ்மா லெப்பை தங்கம்மா

*கேப்டன் பாறுக் என்று புலிகள் இயக்கத்தால் அழைக்கப்படும் இவர் யாழ்ப்பாணத்தில் பேக்கரி வேலையில் ஈடுபட்டிருந்தபோது LTTE இயக்கத்தால் உள்வாங்கப்பட்டு இயக்கத்திற்காக நிறைய வீர தீர செயல்களில் பங்கெடுத்திருந்தார்.*



**பெயர்:** பிச்சைத்தம்பி அபூசாலி

**விலாசம்:** 346, அல் ஹிதாயா வீதி, அக்கரைப்பற்று - 04

**பிறந்த திகதி:** 1975

**கொல்லப்பட்ட திகதி:** 1987

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** புலிகளால்

**தகவல்:** சஹாப்தீன் சகோதரர்

*- யாழ்ப்பாணத்தில் வைத்து கொல்லப்பட்டார். இவருடைய ஜனாஸா யாழ். சின்னப்பள்ளி வாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.*

25

**பெயர்:** சரிபுத்தம்பி ரிபாஸ்

**விலாசம்:** 175/3, மத்திய மகாவித்தியாலய வீதி, அக்கரைப்பற்று - 06

**பிறந்த திகதி:** 1962-05-05

**கொல்லப்பட்ட திகதி:** 1987-08-20

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** தமிழ்ப் பயங்கரவாதிகளால்

**தகவல்:** பதுர் நிஸா

*- வண்டில் மாடு உரிமையாளரான இவர் வட்டமடு பாலத்தடியில் வைத்து மரம் ஏற்ற சென்றவேளை அடித்தும் சுட்டும் கொல்லப்பட்டார்.*

26

**பெயர்:** சம்சுடீன் அபுல் ஹஸன்

**விலாசம்:** 59, புதுப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று- 05

**பிறந்த திகதி:** 1971-08-15

**கொல்லப்பட்ட திகதி:** 1988

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** இந்திய இராணுவத்தால்

**தகவல்:** நண்பர்

*- LTTE இயக்க உறுப்பினரான இவர் அக்கரைப்பற்று நாசுவ வட்டையில் வைத்து கொல்லப்பட்டார். இளமையில் நேர்மையும் நற்பண்பும் கொண்ட இவர் தனது பிரதேசத்தில் அயலவர்களால் மிகவும் நேசிக்கப்பட்டார்.*

27

**பெயர்:** முஹம்மது அலியார் ஜுனைதீன்

**விலாசம்:** 73/1, ஹிஜ்ரா வீதி, அக்கரைப்பற்று - 05

**பிறந்த திகதி:** 1964

**கொல்லப்பட்ட திகதி:** 1988-06-26

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** இந்திய இராணுவத்தால்

**தகவல்:** மனைவி

*- LTTE இயக்க ஆதரவாளரான இவர் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டார்.*



**பெயர்:** ஆதம் பாவா முகம்மது சரிபூடீன்

**விலாசம்:** 63, A V V வீதி, அக்கரைப்பற்று-06

**பிறந்த திகதி:** 1953-02-18

**கொல்லப்பட்ட திகதி:** 1988-08-12

**யாரால் நிகழ்த்தப்பட்டது: LTTE** இனரால்

**தகவல்:** ஆதம் பாவா டீன்

*- இலுக்குச்சேனையில் வைத்துக் கொல்லப்பட்டார்.*



**பெயர்:** உதுமா லெப்பை அப்துல் கலீல்

**விலாசம்:** 223, ஆலிம் றோட், அக்கரைப்பற்று-03

**பிறந்த திகதி:** 1958-06-10

**கொல்லப்பட்ட திகதி:** 1988-11-02

**யாரால் நிகழ்த்தப்பட்டது: LTTE** இனரால்

**தகவல்:** யூ.எல். றசீதா

*- ஈரோஸ் இயக்க ஆதரவாளரான இவர் இரவு வேளையில் வீட்டில் வைத்து கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார்.*

30

**பெயர்:** ஆதம்பாவா காசித்தீன்

**விலாசம்:** இல. 8/ஏ, ஜின்னா விதி, அக்கரைப்பற்று - 05.

**பிறந்த திகதி:** ---

**கொல்லப்பட்ட திகதி:** 01 - 09 - 1988

**யாரால் நிகழ்த்தப்பட்டது: LTTE** இனரால்

**தகவல்:** சுலைமா லெவ்வை அவ்வாக்குட்டி

*- அக்கரைப்பற்றில் வைத்து காட்டு மாடு என்றழைக்கப்படும் **LTTE** குழுவினரால் அடித்துக் கொல்லப்பட்டார்.*

31

**பெயர்:** முகம்மது முகைதீன் அப்துல் மஜீட்

**விலாசம்:** 54, முதலியார் வீதி, அக்கரைப்பற்று - 04.


**பிறந்த திகதி:** 27 - 11 - 1967

**கொல்லப்பட்ட திகதி:** 21 - 11 - 1988

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** தமிழ்ப் பயங்கரவாதிகளால்

**தகவல்:** எம்.எம்.எம். கதாவி

*- **LTTE** இயக்க ஆதரவாளரான இவர் கடத்திச் செல்லப்பட்டு கொச்சிக்காச் சேனையில் வைத்து கொல்லப்பட்டார்.*



**பெயர்:** ஆதம்பாவா கலீல்

**விலாசம்:** 151, புதுப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று 5

**பிறந்த திகதி:** 08 - 08 - 1961

**கொல்லப்பட்ட திகதி:** 1988

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** கஜபா இராணுவம்

**தகவல்:** தாயார் சுல்தான் பீவி

*- மாதுவள புகையிலைத் தோட்டத்தில் வைத்து கொல்லப்பட்டார்.*



**பெயர்:** முஹம்மது இஸ்மாயில் பதுறுத்தீன்

**விலாசம்:** 214, மத்திய வீதி, அக்கரைப்பற்று - 05.

**பிறந்த திகதி:** 06 - 05 - 1967

**கொல்லப்பட்ட திகதி:** 1988.08.06

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** இராணுவத்தால்

**தகவல்:** முகம்மது அபூபக்கர் முகம்மது இஸ்மாயில்

*- புளட் இயக்கத்திற்கு பயிற்சிக்கு செல்லும்போது வவுனியாவில் வைத்து கொல்லப்பட்டார்.*



**பெயர்:** யாசீன் பாவா நியாஸ்

**விலாசம்:** 238/1, ஆலிம் றோட், அக்கரைப்பற்று - 03

**பிறந்த திகதி:** 1964

**கொல்லப்பட்ட திகதி:** 1988.08.06

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** இராணுவத்தால்

**தகவல்:** தந்தை யாஸின் பாவா

*- - புளட் இயக்கத்திற்கு பயிற்சிக்கு செல்லும்போது வவுனியா செட்டிக் குளத்தடியில் வைத்து கொல்லப்பட்டார்.*

35

**பெயர்:** சம்சுதீன் அஸ்ரப்

**விலாசம்:** 75/பி, மத்திய வீதி, பள்ளிக் குடியிருப்பு - 01, அக்கரைப்பற்று.

**பிறந்த திகதி:** 15 - 04 - 1984

**கொல்லப்பட்ட திகதி:** 15 - 04 - 1989

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** LTTE இனரால்

**தகவல்:** தாய் கலந்தர் சபிய்யா உம்மா

*- தனது தந்தையுடன் வயலில் இருக்கும்போது கொல்லப்பட்டார்.*



பெயர்: ஆதம்பாவா இப்றாஹிம்

விலாசம்: இல. 8/ஏ, ஜின்னா வீதி, அக்கரைப்பற்று - 05

பிறந்த திகதி: ---

கொல்லப்பட்ட திகதி: 07 - 07 - 1989

யாரால் நிகழ்த்தப்பட்டது: LTTE இனரால்

தகவல்: சுலைமாலெவ்வை அவ்வாக்குட்டி

*- புளட் இயக்க உறுப்பினரான இவர் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார்.*



பெயர்: முகையதீன் பாவா முறிஸ்

விலாசம்: 77/1, மத்திய வீதி, அக்கரைப்பற்று - 06

பிறந்த திகதி: 19 - 04 - 1976

கொல்லப்பட்ட திகதி: 08 - 12 - 1989

யாரால் நிகழ்த்தப்பட்டது: ஈ.பி.டி.பி. இனரால்

தகவல்: எம்.பி. றிஸ்வானா

- எல்.ரி.ரி.இ. இயக்க உறுப்பினரான இவர் கன்னா முனையில் நடந்த மோதலில் கொல்லப்பட்டார்.



பெயர்: தாவுது லெவ்வை சம்சுதீன்

விலாசம்: 75/பி, மத்திய வீதி, பள்ளிக்குடியிருப்பு - 01, அக்கரைப்பற்று

பிறந்த திகதி: 07 - 05 - 1944

கொல்லப்பட்ட திகதி: 02 - 11 - 1989

யாரால் நிகழ்த்தப்பட்டது: IPKF, ENDLRF இணைந்து.

தகவல்: மனைவி கலந்தர் சபிய்யா உம்மா

*- LTTE ஆதரவாளர் என காரணம் கூறி இரவு வேளையில் வீட்டில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டார்.*

39

பெயர்: சம்சுதீன் பதுறுதீன்

விலாசம்: 75/பி, மத்திய வீதி, பள்ளிக்குடியிருப்பு - 01, அக்கரைப்பற்று - 06

பிறந்த திகதி: 20 - 05 - 1967

கொல்லப்பட்ட திகதி: 02 - 11 - 1989

யாரால் நிகழ்த்தப்பட்டது: IPKF, ENDLRF இணைந்து.

தகவல்: கலந்தர் சபிய்யா உம்மா (தாய்)

*- LTTE ஆதரவாளர் என காரணம் கூறி இரவு வேளையில் வீட்டில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டார்.*

40

**பெயர்:** அப்துல் குத்துஸ் ஸாஜஹான்

**விலாசம்:** 150, புதுப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று - 05

**பிறந்த திகதி:** 17 - 08 - 1963

**கொல்லப்பட்ட திகதி:** 07 - 11 - 1989

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** EPRLF இனரால்

**தகவல்:** தாய் றாயிலா உம்மா

*- பொத்துவிலில் இருந்து அக்கரைப்பற்றுக்கு பஸ்ஸில் பயணிக்கும்போது இறக்கி வைக்கப்பட்டு கொல்லப்பட்டார். (ஜனாஸா கிடைக்கவில்லை)*



**பெயர்:** ஆதம்லெவ்வை பாரீஸ்

**விலாசம்:** 158/2, ஹிஜ்ரா வீதி, அக்கரைப்பற்று - 01

**பிறந்த திகதி:** 08 - 01 - 1973

**கொல்லப்பட்ட திகதி:** 22 - 06 - 1989

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** LTTE இனரால்

**தகவல்:** ஆதம்லெவ்வை தாரிபா

*- EPRLF இயக்க உறுப்பினராகிய இவர் வவுனியா செட்டிக் குளத்தடியில் வைத்து கொல்லப்பட்டார்.*

42

**பெயர்:** அபூபக்கர் முஹம்மது பாறூக்

**விலாசம்:** 181, மையவாடி வீதி, நகர்பிரிவு - 05, அக்கரைப்பற்று

**பிறந்த திகதி:** 1974

**கொல்லப்பட்ட திகதி:** 1989

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** LTTE இனரால்

**தகவல்:** சகோதரர்

*- சாகாமத்து வயலுக்கு சென்றபோது கொல்லப்பட்டார். ஜனாஸா கிடைக்கவில்லை.*

43

**பெயர்:** முஹம்மது ஹசனார் அச்சி முகம்மது (கலீல்)

**விலாசம்:** 219, ஜின்னா வீதி, அக்கரைப்பற்று - 04

**பிறந்த திகதி:** 15 - 10 - 1957

**கொல்லப்பட்ட திகதி:** 01.08.1989

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** LTTE இனரால்

**தகவல்:** முஹம்மது இப்றாஹிம் அவ்வாக்குட்டி

*- EPRLF ஆதரவாளரான இவர் அக்கரைப்பற்று ஆயிஷா வித்தியாலய ஒழுங்கையில் வைத்து கொல்லப்பட்டார். இயற்கையாகவே கலைஞரான இவர் 'உயிரே உனக்காக' என்ற மேடை நாடகத்தை அரங்கேற்றியவர். இவரது ஜனாஸா இந்திய இராணுவத்தின் மரியாதை வேட்டுக்களுடன் அடக்கம் செய்யப்பட்டது.*



**பெயர்:** முகம்மது இஸ்மாயில் அலி உதுமான்

**விலாசம்:** 114, அலிஉதுமான் வீதி, அக்கரைப்பற்று – 02

**பிறந்த திகதி:** 01 – 03 – 1946

**கொல்லப்பட்ட திகதி:** 31 – 08 – 1989

**யாரால் நிகழ்த்தப்பட்டது:** **ENDLF இனரால்**

**தகவல்:** ஏ.ஆர்.ஏ. பிஷ்ருல் ஹாபி

*– 1989 ஆகஸ்ட் முதலாம் திகதி சற்றும் எதிர்பாராத ஒரு தருணத்தில் எங்களது சமுக விடுதலைக்கான ஒளிவிளக்கை ஏந்திநின்ற ஓர் உன்னதமான மனிதனை இழந்து விடுவோம் என்ற எந்த எதிர்பார்ப்பும் இல்லாது, அன்றும் வழமைபோல் ஒரு சாதாரண நாளாய்த்தான் விடிந்தது. ஆனால், அலி உதுமானின் முன்னெற்றியை கிழித்த துப்பாக்கி ரவைகளும் அவரது இரத்தம் சிந்திய இந்த மண்ணும் - அந்த நாளை வரலாற்றின் பக்கங்களில் மறக்கவே முடியாத ஒரு நாளாய் மாற்றிவிட்டது. இந்த துயரச்செய்தியை நம்ப முடியாமல் பல்லாயிரக்கணக்கான மனித உள்ளங்கள் அதிர்ச்சியில் உறைந்துபோய் விட்டன.*

*இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் காரணமாக இங்கு வந்த* **IPKF** *வட கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு சொல்லொண்ணா கொடுமைகளை இழைத்தனர் அவர்களது அடிவருடிகளாய் செயற்பட்ட தமிழ் இயக்கங்கள் மற்றும் புலிகளது கெடுபிடிகளுக்கும் முஸ்லிம்கள் முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. இந்த அராஜகங்களுக்கு எதிராக அலி உதுமான் தைரியமாக குரல் எழுப்பினார். மாகாண சபை உறுப்பினராக அவர் இருந்தபோது அப்போதைய* **IPKF** *இன் அக்கரைப்பற்று பொறுப்பாளர் கேணல் நெஞ்சப்பாவுக்கும் அலி உதுமான் சேருக்கும் அடிக்கடி முரண்பாடுகள் எழுந்தன. அதேபோல் அவரைச் சுட்டுக்கொன்ற* **ENDLF** *இன் அக்கரைப்பற்று பொறுப்பாளர் சீலனுக்கும் அவனது குண்டர் படைக்கும் அலி உதுமான் சேருக்கும் இடையே அடிக்கடி வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.* **ENDLF** *இனர் அவருக்கு பல தடவை அச்சுறுத்தல் விடுத்திருக்கின்றனர். 1989.05.01 ம் திகதிய தனது டயறிக் குறிப்பில் அவர் இவ்வாறு எழுதியிருக்கிறார்.* **"Seelan's Boys threatened me on the T. Phone"** *(சீலனின் பையன்கள் தொலைபேசி மூலம் என்னை அச்சுறுத்தினர்) அலி உதுமான் சேருக்கு இவ்வாறான கொலை அச்சுறுத்தல்கள் அடிக்கடி வந்த வண்ணமே இருந்தன. அந்த நாட்கள் அவருக்கும் தனக்கும் சந்தோஷம் இல்லாத சோகமான நாட்கள் என அவரது துணைவியார் கூறினார்.*

*அவர் வாழ்ந்த கால கட்டம் முஸ்லிம்களை பொறுத்தவரை மிகவும் சிக்கலானதும், நெருக்குதல்களும், அடக்கு முறையும் மலிந்ததுமான ஒரு காலகட்டமாகும். 1985ல் முஸ்லிம்களுக்கு எதிராக வெடித்த வன்முறைகள், ஆயுதம் தாங்கி தமிழ் குழுக்களின் அடி மனதுள் புதையுண்டு கிடந்த இனவாத உணர்வுகளை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தது. பிற்காலத்தில் முஸ்லிம்களது உயிருக்கும் உடமைகளுக்கும் - ஏன் தமது பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டதற்கும் இந்த இனவாத உணர்வே அடிப்படை காரணியாய் அமைந்தது நாம் எல்லோரும் அறிந்ததே. இந்த அச்சுறுத்தலை அதன் ஆரம்ப காலங்களிலேயே அடையாளம் கண்டோருள் அலி உதுமானும் ஒருவர்.*

*அலி உதுமான் பிரதிநிதித்துவம் செய்தது ஒரு கட்சியின் கருத்தையல்ல மாறாக ஒரு சமுகத்தின் உணர்வுகளையும் அபிலாஷைகளையுமே. அதனால்தான் இந்த சமுகத்தின் வரலாற்றில் மறக்கப்பட முடியாத போராளியாக அவர் இன்று நினைவுகூரப்படுகிறார். எதிர்காலத்திலும் நினைவுகூரப்படுவார்.*


* *'துப்பாக்கி அரக்கரும் மனித விதியும்' நூலில் இருந்து.*

| 45 | பெயர்: முகம்மது இஸ்மாயில் கலீல்<br>விலாசம்: இல.06, புதுப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று - 05<br>பிறந்த திகதி: 15 - 03 - 1971<br>கொல்லப்பட்ட திகதி: 28 - 05 - 1988<br>யாரால் நிகழ்த்தப்பட்டது: EPRLF இனரால்<br>தகவல்: மு.இ. பாத்தும்மா |
|---|---|

- LTTE இயக்க உறுப்பினராகிய இவர் அக்கரைப்பற்ற 8ம் குறிச்சியில் வைத்து கொல்லப்பட்டார்.

**கொலை செய்த இடம்:** கஞ்சிகுடிச்சாறு

**தகவல் கொடுப்பவர்:** ஏ.பி. கலந்தர் லெப்பை



**பெயர்:** முஹம்மது முஹிதீன் தைய்யிப் (சி.வி.எப். )


**விலாசம்:** 226, காதிரிய்யா கடற்கரை வீதி, அக்கரைப்பற்று - 01.

**பிறந்த திகதி:** 30.03.1971

**கொல்லப்பட்ட திகதி:** 11.06.1990

**கொலை செய்த இடம்:** கஞ்சிகுடிச்சாறு

**தகவல் கொடுப்பவர்:** மையன் அலியார் முக்குலுத்தும்மா



**பெயர்:** சம்சுத்தீன் இப்றாஹீம் (சி.வி.எப்)

**விலாசம்:** 151, ரைஸ்மில் வீதி, பட்டியடிப்பிட்டி, அக்கரைப்பற்று - 06

**பிறந்த திகதி:** 02.07.1970

**கொல்லப்பட்ட திகதி:** 11.06.1990

**கொலை செய்த இடம்:** கஞ்சிகுடிச்சாறு

**தகவல் கொடுப்பவர்:** எம்.பி. நாகூர் உம்மா (தாய்)



**பெயர்:** உதுமாலெப்பை பஷீர்

**விலாசம்:** 299, பொத்துவில் வீதி, அக்கரைப்பற்று - 01.

**பிறந்த திகதி:** 1964

**கொல்லப்பட்ட திகதி:** 11.06.1990

**கொலை செய்த இடம்:** கஞ்சிகுடிச்சாறு

**தகவல் கொடுப்பவர்:** உதுமாலெப்பை

# வெவ்வேறு சந்தர்ப்பங்களில் புலிகளால் கொல்லப்பட்ட அக்கரைப்பற்றைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள்.



**பெயர்:** முஹம்மது இப்றாலெப்பை முஹம்மது கஸ்ஸாலி (பொலிஸ் செரேன் இல. 20200)

**விலாசம்:** 117, ஜின்னா வீதி, அக்கரைப்பற்று - 04.

**பிறந்த திகதி:** 11.09.1971

**கொல்லப்பட்ட திகதி:** 25.01.1998

**கொலை செய்த இடம்:** அக்கரைப்பற்று சந்தை

**தகவல் கொடுப்பவர்:** மனைவி நதீரா



**பெயர்:** அப்துல் கபூர் அப்துல் மஜீட் (பொலிஸ் செரேன் இல. 28350)


**விலாசம்:** 717/2 பீ, ஒவுஷர் வீதி, அக்கரைப்பற்று - 06.

**பிறந்த திகதி:** 20.04.1969

**கொல்லப்பட்ட திகதி:** 02.04.1999

கொலை செய்த இடம்: மன்னார்

**தகவல் கொடுப்பவர்:** அப்துல் கபூர்



**பெயர்:** சீனி முஹம்மது அசனார் (சி.வி.எப்.)

**விலாசம்:** 252, ஹிஜ்ரா வீதி, அக்கரைப்பற்று - 01.

**பிறந்த திகதி:** 14.03.1967

**கொல்லப்பட்ட திகதி:** 12.05.2001

**கொலை செய்த இடம்:** அக்கரைப்பற்று சந்தை

**தகவல் கொடுப்பவர்:** முகம்மது இப்றாலெப்பை ஆமிஷா உம்மா (மனைவி)

169

**பெயர்:** முஹம்மது அலியார் அப்துல் சலீம்

**விலாசம்:** 68, ஜின்னா வீதி, அக்கரைப்பற்று - 04.

**பிறந்த திகதி:** 28.02.1963

**கொல்லப்பட்ட திகதி:** ..............

**கொலை செய்த இடம்:** ஒந்தாச்சி மடம்

**தகவல் கொடுப்பவர்:** பொலிஸ் நிலையம், அக்கரைப்பற்று

170

பெயர்: மஷூட் (பொலிஸ் செரேன் இல. 26920)

விலாசம்: ஜி.சி.டி. வீதி, அக்கரைப்பற்று

பிறந்த திகதி: —

கொல்லப்பட்ட திகதி: —

கொலை செய்த இடம்: ---

தகவல் கொடுப்பவர்: அக்கரைப்பற்று பொலிஸ், நிலையம்

171

பெயர்: முஹம்மட் (உப பொலிஸ் செரேன் இல. 38216)

விலாசம்: ஜின்னா வீதி, அக்கரைப்பற்று - 04.

பிறந்த திகதி: ............

கொல்லப்பட்ட திகதி: ............

கொலை செய்த இடம்: ..................

தகவல் கொடுப்பவர்: அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம்

2006.09.16 அன்று பொத்துவிலில் உள்ள றதல்ல குளத்தருகே படுகொலை செய்யப்பட்ட 10 முஸ்லிம்களில் மூவர் அக்கரைப்பற்றை சேர்ந்தவர்கள். இக்கூட்டுக் கொலைச் சம்பவம் LTTE இனரால் மேற்கொள்ளப்பட்டதென அரசாங்கமும் விஷேட அதிரடிப்படையினரால் மேற்கொள் ளப்பட்டிருக்கலாம் என பொதுமக்களும் சந்தேகிக்கின்றனர்.

26.09.06 அன்று
பொத்துவிலில்
இடம்பெற்ற கூட்டுக்
கொலையின் நிழற்படம்



## தொழில் நிமித்தம் பொத்துவிலுக்குச் சென்றிருந்த கொல்லப்பட்ட அக்கரைப்பற்றைச் சேர்ந்த மூவரும்....

172

**பெயர்:** அப்துல் பரீட் பைசல்
**விலாசம்:** 80, ஏ.ஆர்.எச். வீதி, பட்டியடிப்பிட்டி, அக்கரைப்பற்று - 06.
**பிறந்த திகதி:** 14.05.1989
**கொல்லப்பட்ட திகதி:** 16.09.2006
**கொலை செய்த இடம்:** பொத்துவில்
**தகவல் கொடுப்பவர்:** என்.எல். சல்மா

173

**பெயர்:** அப்துல் மஜீட் பைறூஸ்
**விலாசம்:** 204, பட்டியடிப்பிட்டி, அக்கரைப்பற்று - 06
**பிறந்த திகதி:** 13.09.1987
**கொல்லப்பட்ட திகதி:** 16.09.2006
**கொலை செய்த இடம்:** பொத்துவில்
**தகவல் கொடுப்பவர்:** சகோதரர் இர்பான்



**பெயர்:** நூஹு லெப்பை அஸ்மின்
**விலாசம்:** 202/2, பட்டியடிப்பிட்டி, அக்கரைப்பற்று - 06
**பிறந்த திகதி:** மார்ச், 1988
**கொல்லப்பட்ட திகதி:** 16.09.2006
**கொலை செய்த இடம்:** பொத்துவில்
**தகவல் கொடுப்பவர்:** தாய்

## 02.01.2008 அன்று குருநாகலில் இருந்து மட்டக்களப்பின் ஊடாக அக்கரைப்பற்றை நோக்கி வரும்போது காணாமல்போன இருவர்



**பெயர்:** ஆதம்லெவ்வை அமீன்
**விலாசம்:** 414, காரியப்பர் வீதி, அக்கரைப்பற்று 06
**அடையாள அட்டை இல. :** 772070799 வி.
**தகவல் கொடுப்பவர்:** தாய்



**பெயர்:** ஆதம்லெவ்வை ஹறுசத்
**விலாசம்:** 144, ஜின்னா வீதி, அக்கரைப்பற்று 04
**அடையாள அட்டை இல. :** 841783026 வி
**தகவல் கொடுப்பவர்:** தாய்

## அங்கவீனமடைந்தவர்களும் காயமடைந்தவர்களும்

**கடந்த காலங்களில் ஈழத்திற்கான போராட்டம் முஸ்லிம் உயிர்களை காவுகொண்ட அதேவேளை வாழ்நாள் பூராகவும் வடுவாய், சில அங்கவீனர்களையும், காயங்களையும் விட்டுச்செல்ல தவறவில்லை!**

A51


**பெயர்:** முஹம்மது அபூபக்கர் சாலித்தம்பி

**விலாசம்:** 524, எம்.எம்.சி. வீதி, அக்கரைப்பற்று – 06

**பிறந்த திகதி:** 04.08.1942

**காயமடைந்த திகதி:** 10.08.1990

*- பனையறுப்பானில் உள்ள தனது வயலுக்கு சென்றவேளை கண்ணிவெடியில் சிக்குண்டு முழங்கால்வரை கால் அகற்றப்பட்டது.*



**பெயர்:** ஆதம்பாவா ஜமாலுத்தீன்

**விலாசம்:** 184, வாய்க்கால் வீதி, பள்ளிக் குடியிருப்பு, அக்கரைப்பற்று – 06.

**பிறந்த திகதி:** 20.03.1948

**காயமடைந்த திகதி:** 18.02.2002

*- இலுக்குச்சேனைக்கு சென்றவேளை தமிழ் ஆயுதக் குழுக்களால் தாக்கப்பட்டபோது கால் அகற்றப்பட்டது.*



**பெயர்:** உதுமாலெப்பை சீனி முஹம்மது

**விலாசம்:** அல் முனவ்வறா வீதி, அக்கரைப்பற்று – 04

**பிறந்த திகதி:** 25.10.1938

**காயமடைந்த திகதி:** 02.01.1989

*- முறாணவட்டியில் வைத்து தமிழ் பயங்கரவாதிகளின் கண்ணிவெடியில் சிக்கி கால் இழந்தார்.*



**பெயர்:** முகம்மது காசிம் தௌபீக்

**விலாசம்:** 214, எம்.எம்.வி. வீதி, அக்கரைப்பற்று – 06

**பிறந்த திகதி:** 14.03.1956

**காயமடைந்த திகதி:** 16.07.1998

*- அக்கரைப்பற்று சாகாம பொலிஸ் தடுப்பு காவலரணடியில் வைத்து புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் கால் இழந்தார்.*


***கால் இழந்துள்ள இவர்களது குடும்பம் மிக வேதனையுடனும் பொருளாதார நெருக்குவாரத்துடனும் வாழ்க்கை ஓட்டுகிறது.***



**பெயர்:** ஷரிபுத் தம்பி நபிஸா உம்மா
**விலாசம்:** 28, ஓவிஷர் வீதி, அக்கரைப்பற்று - 01.
**பிறந்த திகதி:** 20 - 07 - 1962
**காயமடைந்த திகதி:** 04 - 03 - 2005
*- வெலிக்கந்தைக்கு சூடடிக்கச் சென்ற முஸ்லிம் குடும்பத்தை நோக்கி புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்தார்.*



**பெயர்:** முஹம்மது அலியார் ஜமால்தீன்
**விலாசம்:** 48/ஏ, அல்ஸாஹிரா வீதி, அக்கரைப்பற்று - 01.
**பிறந்த திகதி:** 17.11.1961
**காயமடைந்த திகதி:** 04.06.1998
*- அக்கரைப்பற்று பழைய இலங்கை வங்கிக்கு முன்னால் இடம்பெற்ற தாக்குதலின்போது காயமடைந்தார்.*




**பெயர்:** ஜெயினுல் ஆப்தீன் முஹம்மது ஜெளபர்
**விலாசம்:** 42ஏ, ஓவிஷர் வீதி, அக்கரைப்பற்று - 01.
**பிறந்த திகதி:** 02.01.1968
**காயமடைந்த திகதி:** 28.03.1992
*- நிந்தவூரில் வைத்து புலிகளால் தாக்கப்பட்டார்.*



**பெயர்:** ஆதம்லெப்பை ஆசியா உம்மா
**விலாசம்:** 291, வெள்ளப் பாதுகாப்பு வீதி, அக்கரைப்பற்று - 06.
**பிறந்த திகதி:**
**காயமடைந்த திகதி:** 1991
*- இத்தாயினுடைய மகன் வயலுக்குள் புலிகளால் கொல்லப்பட்டதை கேள்வியுற்றதுடன் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக மனநோய்க்கு ஆளானார். இவ்வாறு ஒவ்வொரு கொலைக்குப் பின்னாலும் வேதனைகள் தேங்கிக் கிடக்கின்றன.*

A5

**பெயர்:** முஹைதீன் பாவா அப்துல் காதர்
**விலாசம்:** 174, மையவாடி வீதி, அக்கரைப்பற்று - 01.
**பிறந்த திகதி:** 1969
**காயமடைந்த திகதி:** 15.08.1990
*- நீத்தை பாலத்தடியில் வைத்து புலிகளால் தாக்கப்பட்டார்.*




**பெயர்:** மீராஸாஹிப் அப்துல் ரஹீம் றிஸ்வான்

**விலாசம்:** 54/3, மத்திய வீதி, பதுர் நகர், அக்கரைப்பற்று – 01.

**பிறந்த திகதி:** 03.09.1975

**காயமடைந்த திகதி:** 06.08.1990

*- காத்தான்குடி கடற்கரையடியில் வைத்து புலிகளால் தாக்கப்பட்டார்.*




**பெயர்:** ஆதம்பாவா ஷஹாப்தீன்

**விலாசம்:** 230, ஹிஜ்ரா வீதி, அக்கரைப்பற்று – 01.

**பிறந்த திகதி:** 19.01.1957

**காயமடைந்த திகதி:** 1990

*- மொட்டையான் வெளியில் வைத்து புலிகளால் தாக்கப்பட்டார்.*




**பெயர்:** இஸ்மாலெப்பை ஆதம்லெப்பை

**விலாசம்:** 896, சேர் ராசிக் பரீட் வீதி, அக்கரைப்பற்று – 01.

**பிறந்த திகதி:** 02.09.1940

**காயமடைந்த திகதி:** 1990

*- இராணுவத்தால் அடித்து காயப்படுத்தப்பட்டார்.*



**பெயர்:** சரிபுத்தம்பி முஹம்மது அப்துல்

**விலாசம்:** 238, ஹிஜ்ரா வீதி, அக்கரைப்பற்று – 01.

**பிறந்த திகதி:** 02.07.1941

**காயமடைந்த திகதி:** 1990

*- பொத்தானை வட்டையில் வைத்து புலிகளால் அடித்து காயப்படுத்தப்பட்டார்.*



**பெயர்:** யூசுப் லெப்பை மீராலெப்பை

**விலாசம்:** 42, ஓவிஷர் வீதி, அக்கரைப்பற்று – 01.

**பிறந்த திகதி:** 08.07.1936

**காயமடைந்த திகதி:** 23.06.1990

*- அக்கரைப்பற்றில் வைத்து புலிகளால் அடித்து காயப்படுத்தப்பட்டார்.*

A11

**பெயர்:** அஹமது லெப்பை ஆதம்லெப்பை

**விலாசம்:** 154, கடற்கரை வீதி, அக்கரைப்பற்று - 01.

**பிறந்த திகதி:** 18.08.1968

**காயமடைந்த திகதி:** 1989.11.08

*- தமிழ் தேசிய இராணுவத்தால் சம்மாந்துறை வீரமுனை சந்தியில் வைத்து அடித்துக் காயப்படுத்தப்பட்டார்.*



**பெயர்:** சாலித்தம்பி சம்சுமக்கீன்

**விலாசம்:** 165, பெரிய பள்ளி வீதி, அக்கரைப்பற்று - 04.

**பிறந்த திகதி:** 18.07.1958

**காயமடைந்த திகதி:** 17.05.1989

*- அக்கரைப்பற்றில் வைத்து தமிழ் பயங்கரவாதிகளால் காயப்படுத்தப்பட்டார்.*



**பெயர்:** சாயிபுலெப்பை சுலைஹா உம்மா

**விலாசம்:** 139, சுகாதார நிலைய வீதி, அக்கரைப்பற்று.

**பிறந்த திகதி:** 15.06.1944

**காயமடைந்த திகதி:** 10.07.1989

*- பள்ளிக்குடியிருப்பில் வைத்து EPRLF இனரால் காயப்படுத்தப்பட்டார்.*



**பெயர்:** முகம்மது ஹனீபா முஹம்மது இஸ்மாயில்

**விலாசம்:** 121, கடற்கரை வீதி, அக்கரைப்பற்று - 01.

**பிறந்த திகதி:** 03.01.1945

**காயமடைந்த திகதி:** 03.06.1987

*- சின்னமுகத்துவார விஷேட அதிரடிப்படை முகாமுக்கு முன்னால் அடித்து காயப்படுத்தப்பட்டார்.*



**பெயர்:** அஸனார் லெப்பை சேகு முஹைடீன்

**விலாசம்:** 221, ஹிஜ்ரா வீதி, அக்கரைப்பற்று - 01.

**பிறந்த திகதி:** 04.09.1937

**காயமடைந்த திகதி:** 1985

*- வெல்வெந்தையில் வைத்து தமிழ் பயங்கரவாதிகளால் படு மோசமாக தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டார்.*




பெயர்: பக்கீர் முஹைடீன் முகம்மது பரீட்

விலாசம்: 60ஏ, சென்றல் வீதி, அக்கரைப்பற்று - 01.

பிறந்த திகதி: 02.01.1970

காயமடைந்த திகதி: 15.07.1984

*- கொழும்பில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலின்போது காயமடைந்தார்.*



பெயர்: முகைதீன் பிச்சை நாகூர்த்தம்பி

விலாசம்: 65, டீன்ஸ் வீதி, அக்கரைப்பற்று - 01

பிறந்த திகதி: 04.06.1947

காயமடைந்த திகதி: ----

*- பனங்காட்டு துறையடி பாலத்தடியில்வைத்து தமிழ் பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டார்.*

## 18.11.2005 பெரிய பள்ளிவாயலில் இடம்பெற்ற பயங்கரவாதிகளது தாக்குதலின்போது காயமடைந்தோர் விபரம்.



பெயர்: ஆதம்பாவா முகம்மது இஸ்மாயில்

விலாசம்: 122, காசிம் வீதி, அக்கரைப்பற்று - 05.


பிறந்த திகதி: 05.10.1937

A18

பெயர்: முகம்மது முஹைடீன் முகம்மது ஹாஷிம்

விலாசம்: 89, பட்டினப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று - 06.

பிறந்த திகதி: 31.01.1944



பெயர்: அப்துல் காதர் முகம்மது பரீட்

விலாசம்: 50, மரைக்கார் வீதி, அக்கரைப்பற்று - 06.


பிறந்த திகதி: 05.04.1949



**பெயர்:** மீராலெப்பை சாலித்தம்பி

**விலாசம்:** 28, ஹாஷிம் வீதி, அக்கரைப்பற்று - 06.

**பிறந்த திகதி:** 29.06.1936



**பெயர்:** முகம்மது இப்ராஹிம் முகம்மது சித்தீக்

**விலாசம்:** 50ஏ, வை.எம்.எம்.ஏ. வீதி, அக்கரைப்பற்று - 01.


**பிறந்த திகதி:** 09.07.1978



**பெயர்:** முகம்மது அஹமட் சுமைல்

**விலாசம்:** 128, ஹாஷிம் வீதி, அக்கரைப்பற்று - 05.

**பிறந்த திகதி:** 29.05.1992



**பெயர்:** முகம்மது காசிம் முகம்மது இப்றாஹிம்

**விலாசம்:** 41, அம்பாரை வீதி, அக்கரைப்பற்று - 06.

**பிறந்த திகதி:** 05.07.1940



**பெயர்:** அகமது முகையதீன் முகம்மது கியாவுதீன்

**விலாசம்:** 248, அம்பாரை வீதி, அக்கரைப்பற்று - 06.

**பிறந்த திகதி:** 08.07.1939

A25

**பெயர்:** முகம்மது அபூசாலிஹு முகம்மது மிஸ்பாஹ்

**விலாசம்:** 144, அல்முனவ்வறா வீதி, அக்கரைப்பற்று.

**பிறந்த திகதி:** 04.01.1957

**அக்கரைப்பற்று பெரியபள்ளிவாயல் குண்டுவெடிப்பின்போது காயமடைந்தோர் பற்றி அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாயல் சம்மேளனம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏனையோர் பற்றிய விபரம்.**

| பெயர் | முகவரி | வயது |
|---|---|---|
| ஆதம்பாவா ஜமால்டீன், | ஏ.வி.வி. வீதி, அக்கரைப்பற்று - 05, | 47 |
| உதுமாலெப்பை புகாரி, | 64, உப தபாலக வீதி, அக்கரைப்பற்று - 01, | 49 |
| முஹம்மட் அலியார் கமால்டீன், | பெரியபள்ளி வீதி, அக்கரைப்பற்று - 04., | 54 |
| எல்.ரி. அனீஸ், | பள்ளிக் குடியிருப்பு, அக்கரைப்பற்று - 06., | 65 |
| முஹம்மட் தஸ்லீம் மௌசூக், | 40, மஜீட் வீதி, அக்கரைப்பற்று - 06., | 48 |
| முஹம்மட் அலியார் கமால்டீன், | பெரியபள்ளி வீதி, அக்கரைப்பற்று - 04., | 54 |
| அபுல் காசிம் அப்துல்லாஹ், | ஹாஷிம் ஆலிம் வீதி, அக்கரைப்பற்று - 06 | |
| முஹம்மட் இப்றாலெப்பை கலீலுர் ரஹ்மான், | மாவடிச் சந்தி, அக்கரைப்பற்று - 06 | |
| சஹாப்தீன் சக்கீல் அஹ்மத், | 204, ஏ.வி.வி. வீதி, அக்கரைப்பற்று - 04, | 18 |
| பக்கீர் முஹைடீன் புஹாரி, | தோம்பர் வீதி, அக்கரைப்பற்று - 03, | |
| ஆதம்பாவா தௌபீக், | 191, அல்பாத்திமியா வீதி, அக்கரைப்பற்று - 01, | 55 |
| முஹம்மட் இப்றாஹிம் அப்துல் ரஷீட், | 154, ஜின்னா வீதி, அக்கரைப்பற்று - 04, | 63 |
| சீனி முஹம்மட் மீராலெப்பை, | 5/6, பொது வீதி, அக்கரைப்பற்று - 05, | 73 |
| இஸ்மாலெப்பை மௌசூர், | 33ஏ, காசிம் வீதி, அக்கரைப்பற்று - 06, | 44 |
| ஆதம்பாவா அஹமட் முஹிதீன், | காசிம் வீதி, அக்கரைப்பற்று - 06, | 67 |
| முஹம்மட் அலியார் இஸ்மாலெப்பை, | ஜின்னா வீதி, அக்கரைப்பற்று - 04, | 64 |
| ஆதம்லெப்பை முஹம்மது சரீப், | 195, பெரியபள்ளி வீதி, அக்கரைப்பற்று - 04. | |
| ஹச்சு முகம்மது ஜவ்பர், | 568 பி, அரசையடி வீதி, அக்கரைப்பற்று - 06, | 28 |
| மீரா மொஹைடீன் உமறுலெப்பை, | 32/5, ஏ.வி.வி. வீதி, அக்கரைப்பற்று - 03, | 32 |
| இமாமுடீன், | குருநாகல், | |

## 1990.08.13 அன்று அக்கரைப்பற்று பெரிய பள்ளி வாயலில் புலிப் பயங்கரவாதிகளின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானவர்கள்

**பெயர்:** முகம்மது இப்றாலெப்பை நபீல்
**விலாசம்:** 05, அம்பாரை வீதி, அக்கரைப்பற்று - 06.
**பிறந்த திகதி:** 30.04.1969
இத்தாக்குதலின்போது இவரது கால் இழக்கப்பட்டது.

**பெயர்:** சுலைமாலெப்பை முஹம்மது மீராசாஹிப்
**விலாசம்:** 119, காசிம் வீதி, அக்கரைப்பற்று - 06.
**பிறந்த திகதி:** 10.11.1953

**பெயர்:** ஏ.எம். சம்சுதீன்
**விலாசம்:** 16. அம்பாரை வீதி. அக்கரைப்பற்று 6
**பிறந்த திகதி:** வயது 50

## 24.03.1991 அன்று அக்கரைப்பற்று மீன் சந்தையில் புலிகளால் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலின்போது காயமடைந்தவர்கள்



**பெயர்:** முஹிடீன் பாவா முஹம்மது இப்றாலெப்பை

**விலாசம்:** 251, ஹிஜ்ரா வீதி, அக்கரைப்பற்று - 01

**பிறந்த திகதி:** 22.06.1935



**பெயர்:** முகம்மது இப்றாஹீம் ஜனூஸ்

**விலாசம்:** 59, மத்திய வீதி, நகர்ப் பிரிவு - 05, அக்கரைப்பற்று

**பிறந்த திகதி:** 13.04.1971



**பெயர்:** முஹம்மட் கனி முஹம்மட் சேப்தீன்

**விலாசம்:** 299, ஹிஜ்ரா வீதி, அக்கரைப்பற்று.

**பிறந்த திகதி:** 30.09.1964



**பெயர்:** முகம்மது சரீப்

**விலாசம்:** 65ஏ, மத்திய வீதி, பதுர் நகர் - 05, அக்கரைப்பற்று - 01

**பிறந்த திகதி:** 09.05.1944



**பெயர்:** ஆதம்பாவா முபாறக்

**விலாசம்:** 50, மத்திய வீதி, நகர்ப் பிரிவு - 05, அக்கரைப்பற்று - 01.

**பிறந்த திகதி:** 21.07.1960



**பெயர்:** ஆதம்லெப்பை அப்துல் காதர்

**விலாசம்:** ஐஸ்மில் வீதி, அக்கரைப்பற்று - 01.

**பிறந்த திகதி:** 03.03.1944



பெயர்: முகம்மது அலியார் நாகூர் தம்பி

விலாசம்: 163, காதரிய்யா வீதி, அக்கரைப்பற்று – 01.

பிறந்த திகதி: 17.07.1963

பெயர்: மொஹிடீன் பிச்சை அப்துல் லத்தீப்

விலாசம்: 193, பெரிய பள்ளி வீதி, அக்கரைப்பற்று – 06

பிறந்த திகதி: 19.05.1948



பெயர்: ஆதம்பாவா முகம்மது மீராசாஹிபு

விலாசம்: 168, காதிரிய்யா பாடசாலை வீதி, அக்கரைப்பற்று – 01

பிறந்த திகதி: 02.06.1935

A66

பெயர்: முகம்மது ஹனீபா அஹமது முஹிதீன்

விலாசம்: 231, காதிரிய்யா வீதி, அக்கரைப்பற்று – 01.

பிறந்த திகதி: 25.04.1962

## 01.02.2008 இரவு 6.30 மணியளவில் அக்கரைப்பற்று பிரதேச சபைக்கு அருகில் வைத்து இனந்தெரியாதோரால் துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானவர்கள்.

A67

பெயர்: முகம்மது இஸ்மாயில் சமீம்

விலாசம்: மன்பஉல் கைறாத் வீதி, அக்கரைப்பற்று 4

பிறந்த திகதி: 21.01.1973

A68

பெயர்: றியாஸ்

விலாசம்: பள்ளிக்குடியிருப்பு, அக்கரைப்பற்று 06.

பிறந்த திகதி: —

## மனிதனும் தேசமும

மனிதன் மதுவாயும்
தேசம் வெறியாயும்
தள்ளாடிச் செல்லும்
ஒரு சாதிக் காலமிது

இரவையும் இருளையும் போலவே
பிரிக்க முடியாததாய் போனது
மிருகமும் மனிதனும்

ஒரு ஜனநாயக தேசத்தின்
ஜனங்கள் அடிபட்டுப்போவது
அதிசய அராஜகம்தான்

உனக்கும் எனக்கும்
பின்னும்
இன முரண்பாடுகளைக் கடந்து
ஒற்றுமையை வாழ்க்கையோடு
ஒட்டித் தரும்
"மனிதர்கள்" வர வேண்டும்!
"மனிதர்கள்" வர வேண்டும்.

எம். உவைஸ்
அக்கரைப்பற்று -05.

வடக்கு கிழக்கு முஸ்லிம் சமாதான பேரவையின் செயலாளர் நாயகம் எம்.ஐ.எம். முஹிதீன் அவர்களால் எழுதப்பட்ட கிழக்கிழங்கை முஸ்லிம் அரசியல். இனமுரண்பாடு. புறக்கணிப்பு என்ற நூலில் இருந்து....

## AKKARAIPATTU MUSLIMS' LANDS UNLAWFULLY OCCUPIED BY LTTE-TAMILS IN AMPARA DISTRICT

### அம்பாரை மாவட்டத்தில் எல்.ரி.ரி.ஈ - தமிழர்களால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அக்கரைப்பற்று முஸ்லிம்களின் காணிகள்

| No. இல. | D.S. Division பிரதேச செயலாளர் பிரிவு | Cases | Extent | | |
|---|---|---|---|---|---|
| | | | A | R | P |
| 1 | Pottuvil பொத்துவில் | 16 | 58 | - | - |
| 2 | Thirukkovil திருக்கோவில் | 457 | 1242 | 3 | 24 |
| 3 | Thambiluvil (Thirukkovil) தம்பிலுவில் (திருக்கோவில்) | 16 | 57 | - | - |
| 4 | Akkaraipattu அக்கரைப்பற்று | 30 | 146 | 3 | 37 |
| 5 | Alayadiwembu ஆலையடிவேம்பு | 131 | 232 | 2 | 24 |
| 6 | Damana தமன | 4 | 16 | - | - |
| 7 | Unspecified இடம் குறிப்பிடப்படாத | 4 | 18 | - | - |
| | **Total** | **658** | **1771** | **02** | **05** |

A - ஏக்கர் R - றூட் P - பேச்

Cases - பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை

### திட்டமிட்ட குடியேற்றம்

சிறுபான்மை இனத்தவர்கள் கூடுதலாக உள்ள மாவட்டங்களில் வெளி மாவட்டப் பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர் குடியேற்றப்பட்டதால் சொந்த மாவட்ட தமிழர் முஸ்லிம்களுக்கு கடுமையான காணித்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது அல்லாமல் அந்தந்த மாவட்டங்களில் உள்ள இனவிகிதாசாரத்தில் பெரும் ஏற்றத் தாழ்வும் ஏற்பட்டு அரசியற் பிரதிநிதித்துவத்தில் சிறுபான்மை இனத்தவருக்குப் பாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

### அம்பாரை மாவட்டம்.


அன்று இலங்கை கிழக்கின் தானியக் குதமாக இருந்தால், கல்முனை - அம்பாரைப், பிரதேசத்தை இலங்கையின் தானியக் குதமென நாம் அழைக்கலாம். அம்பாரை முஸ்லிம்கள் அடர்ந்த காடுகளை அழித்து நெல்வயல்களாக்குவதில் கைதேர்ந்தவர்கள். இங்கினியாகலையிலும் அதனைச் சூளவும் உள்ள புராதன கிராமங்களிலும் முஸ்லிம்களே விவசாயம் செய்துவந்தனர். நாடு 1930ஆம் ஆண்டில் அதிக உணவு பயிரிடல் திட்டத்தை ஆரம்பித்தும், முஸ்லிம்கள் மேலும் பல அடர்ந்த காடுகளைத் திறக்க நிர்ப்பந்திக்கப் பட்டனர். எல்.டி.ஓ. உத்தரவுப்பத்திரங்களோடு பின்வரும் இடங்களைச் செழிப்பான வயல்களாக்கி விவசாயம் செய்துவந்தனர். தாலிபோட்ட ஆற்றுக்கண்டம், அம்பலத்தாறு, சேனைக்கண்டம், வேலாமரத்து வெளி, சோலவட்டை, சீயாத்தரவட்டை, நொறச்சோலை, திராய் ஓடை, கொச்சிக்காலந்து, பொன்னன்வெளி, குடுவில்வட்டை, தொட்டாச் கருங்கிவட்டை, கொண்டவெட்டுவான், மகாகண்டிய, வெள்ளக்கல் தோட்டம்.

இக்காணிகள் திருத்துவதில் எத்தனையோ முஸ்லிம்கள், யானை, புலி, கரடி போன்ற கொடிய விலங்குகளாலும் விஷப் பாம்புகளாலும் தாக்கப்பட்டு மாண்டு மடிந்துள்ளனர். கண், கால், கையிழந்து அங்கவீனர்களான பலர் இன்றும் வயோதிபகாலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

1965இல் இக்காணிகளை சீனிக் கூட்டுத்தாபனம், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையிடம் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு ஏறத்தாள எல்லா முஸ்லிம்களையும் அவர்கள் அதுவரை அரசாங்க அங்கீகாரத்தோடு விவசாயம் செய்துவந்த காணிகளைவிட்டும் பலவந்தமாக வெளியேற்றியது. நொறைச் சோலைக்கண்டத்து முஸ்லிம் விவசாயிகளை புல்டோசர் மூலமாக ஒதுக்கித்தள்ளிவிட்டனர். இதனால் பாதிப்புக்குள்ளான முஸ்லிம்களுக்கு மாற்று நிலமும் நஷ்டஈடும் தருவதாகக் கொடுத்த வாக்குறுதி கடந்த நாற்பது வருடங்களாகப் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. இக்காணிகளில் கரும்பு செய்வதற்கெனத் தென்னிலங்கையிலிருந்து சிங்களவர்கள் கொண்டுவரப்பட்டுக் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். இப்படியாக அம்பலம் ஓயா, சேனைக்கண்டம், சோலவட்டை, வேலாமரத்து வெளி, சீயாத்தரவட்டை முதலிய வயல்களிலிருந்தும் முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள். அக்கரைப்பற்று, நிந்தவூர், கல்முனை பகுதி முஸ்லிம்கள் விவசாயத்தில் தலைசிறந்தவர்கள் என்று அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. கரும்பு செய்கை பண்ணுவதிலும் இவர்கள் எவருக்கும் சளைத்தவர்களல்ல. கல்ஓயா அபிவிருத்திச் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட ஒரு பகுதியில் கரும்புச் செய்கை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டால் அக்கரும்பை ஏன் முஸ்லிம்கள் அவரவர் காணிகளில் செய்கை பண்ணி அரசாங்கத்துக்குக் கொடுக்கக்கூடாது? சுதந்திர இலங்கையின் பிதாவாகிய டி.எஸ். சேனாநாயகா முஸ்லிம் மக்களுக்குக் கொடுத்த வாக்குப்படி கரும்பு செய்யும் காணியில் ஐம்பது வீதத்தை இப்பகுதிப் பூர்வீக குடிகளான முஸ்லிம்களுக்குக் கொடுத்துப் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். நியாயம் செய்ய வேண்டியவர்களே அநியாயம் செய்துவிட்டார்கள், நாற்பது வருடங்களாக இப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இன்று எழுந்துள்ள பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகளால் தீர்க்கலாம் என்று பேச்சளவிலேயே நிற்கும் பெரும்பான்மை இனத்தவரை இப்பகுதி முஸ்லிம்கள் தட்டிக்கேற்கும் காலம் வந்துவிட்டது.



## அம்பாரை மாவட்டத்தின் திட்டமிட்ட அரசாங்க சிங்கள குடியேற்றம்



சிங்களப்பகுதிகளில், எம்பிலிப்பிட்டிய-செவனகல சீனி அபிவிருத்தித் திட்டத்தில் முற்றிலும் மாறான கொள்கையை அரசாங்கம் அமுல் நடத்துகிறது. சட்டவிரோதமாக எந்தவித பேமிட்டும் இல்லாமல் அத்துமீறிக் குடியேறிய ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் எவரையும், கரும்புச் செய்கைக்காக கல்லோயாப் பகுதியில் முஸ்லிம்களை விரட்டியது போன்று விரட்டாமல் அவர்கள் காணிகள் கரும்புச் செய்கைக்காகத் திருத்தியமைக்கும்போது தொழில் இழந்தாரென மாதம் ஒன்றுக்கு ருபா. 550/- மானியம் வழங்கப்பட்டு குறிப்பிடப்பட்ட காணிகள் கரும்புச்செய்கைக்குத் தயார் செய்யப்பட்டபின், ஒவ்வொருவருக்கும் மூன்று தொடக்கம் ஐந்து ஏக்கர் வரை பங்கிட்டுக் கொடுத்து அத்தோடு ஒரு ஏக்கர் திருத்தப்பட்ட மேட்டு நிலமும் குடியிருக்க வீடும் நன்கொடையாகக் கட்டி அன்பளிப்புச்செய்யப்பட்டுள்ளன. கரும்புச்செய்கை காரணமாக எந்தச் சிங்களவர்களும் வெளியேற்றப்படவில்லை. கல்லோயாவில் நடந்தது போன்று வெளியிடங்களிலிருந்து எந்த ஒரு முஸ்லிமையோ, தமிழரையோ அங்கு கொண்டு குடியேற்றவுமில்லை. சிங்களவரைப் பொறுத்தமட்டில் கரும்புச்செய்கை பெரும் வரப்பிரசாதம். ஆனால் முஸ்லிம்களுக்கு அது ஒரு பெரும் கசப்பான நெஞ்சைவிட்டு அகலாத திட்டமிட்ட புறக்கணிப்பாகும்.

அரசாங்கம் நாட்டின் அதிவிசாலமான நீர்ப்பாசனத்திட்டமான கல்லோயாத்திட்டத்தை முஸ்லிம்கள் பெரும்பான்மையாகச் செறிந்து வாழும் கல்முனைப் பகுதியில் நடைமுறைப் படுத்தியதாகவும் அதனால் முஸ்லிம்கள் பெரும்பாலும் பயனடைந்துள்ளார்கள் என்றும் சிங்களவர்கள் கதை கட்டியுள்ளார்கள்.

உண்மையில் கல்லோயாத் திட்டம் முஸ்லிம்களின் உரிமைகளை அபகரிக்கச் சிங்களவர் திட்டமிட்டு நடத்திய ஒரு பெரும் சதி என்று கூறினால் அது மிகையாகாது. இத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட 44 குடியேற்றக் கிராமங்களில் 38 கிராமங்கள் வெளிப்பகுதிகளிலிருந்து வந்த சிங்களவருக்கும், ஆக 6 கிராமங்கள் மட்டும் இப்பகுதியின் பூர்வீகக் குடிகளான முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் கொடுக்கப்பட்டது. குடியேற்றக் காணிப்பங்கீடு, நீர் விநியோகம் அமுல்நடத்தத் தொடங்கியபோது, சுதந்திர இலங்கையின் பிதாவான டி.எஸ். சேனாநாயகா அவர்கள் கூறியது போன்று இப்பகுதிப் பூர்வீகக் குடிகளான முஸ்லிம்களுக்கும், தமிழருக்கும் நூற்றுக்கு ஐம்பது வீதம் எந்தவகையிலும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. எம்மைத்திட்டமிட்டு ஏமாற்றிவிட்டார்கள். கொடுக்கப்பட்ட ஆறு குடியேற்றக்கிராமங்களுக்குக் கோடைகாலங்களில் சேனாநாயக சமுத்திரத்திலிருந்து குடிக்கக்கூட நீர் விநியோகிக்கப்படுவதில்லை என்பது அனேகமானோருக்கு வெளிப்படையாகத் தெரியாத உண்மை. திரு. டி.எஸ். சேனாநாயகா அவர்களின் வாக்குப்படி கல்லோயாத் திட்டத்தின் காணி, நீர் விநியோகம், பாச்சல் வடிச்சல் மற்றும் கரும்புச் செய்கை ஆகிய எல்லாவித வாய்ப்பிலும் பூர்வீகக் குடிகளுக்கு உருத்தான நூற்றுக்கு ஐம்பது விகிதத்தைப் பெற்றுக்கொள்வதுதான் இப்பகுதி முஸ்லிம்களின் இன்றைய இலட்சியம்.

1982 ஜனவரியில் அரசாங்க அதிபர் பொத்துவிலுக்குச் சமீபத்தில் உள்ள அறுகம்பை, உல்லைக் குடியேற்றக் கிராமங்களிலிருந்து எல்லா முஸ்லிம்களையும் வெளியேறுமாறு பொத்துவில் உதவி அரசாங்க அதிபருக்குக் கட்டளையிட்டிருந்தார். இந்த முஸ்லிம்கள் அனைவரும் இப்பகுதியில் குடியிருப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்டு 1968இல் எல்.டி.ஓ. பேர்மிட் பத்திரங்களும் வழங்கப்பட்டிருந்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் பொத்துவில் உதவி அரசாங்க அதிபர் பொலிசாரின் உதவியோடு இங்கிருந்த சில வீடுகளைத் தீவைத்துக் கொழுத்தியுள்ளார். பொறுப்புவாய்ந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் அட்டகாசம் முஸ்லிம் பகுதிகளில் தலைவிரித்தாடுவது இப்போதெல்லாம் சகஜமாகிவிட்டது.

அம்பாரை மாவட்டம் 1,775 சதுர மைல் பரப்பைக் கொண்டது. 1981ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பின்படி சிங்களவர் 37.2 சதவீதமான அல்லது 660 சதுர மைல் பரப்புக்கு உரிமையுடையவர்கள் (ஆனால் 1921ஆம் ஆண்டுக் கணிப்புப்படி கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் எண்ணிக்கை 4 சதவீதமாக இருந்தது இதன்படி அம்பாரையிலுள்ள பூர்வீக சிங்களக் குடிமக்கள் 100 சதுர மைலுக்கும் குறைவான காணிக்கே உரிமையுடையவர்கள். மற்றச் சிங்களவர்யாவரும் பிற மாகாணங்களிலிருந்து திட்டமிட்ட குடியேற்றக் கிராமங்களில் அண்மைக்காலத்தில் வந்தவர்கள்.) ஆனால் சிங்களப்பிரதேசத்தில் ஏறக்குறைய 75 சதவீதமான 1,340 சதுரமைல் விஸ்தீரணமுள்ள காணிகள் உண்டு. முஸ்லிம்கள் 41.6 சதவீதமான 728 சதுர மைல் பரப்புக்கு உருத்துடையவர்கள் இருந்தாலும் முஸ்லிம்கள் பகுதியில் 263 சதுர மைல் காணி மட்டுமே உள்ளன. இது அம்பாரை மாவட்ட விஸ்தீரணத்தின் 15 சதவீதமான பரப்பாகும்.

உண்மை நிலை இப்படி இருக்க முன்னைய அரசாங்கத்தின் அரசியல் அதிகாரியும் அன்றைய அரசாங்கத்தின் மாவட்ட மந்திரியும், சீர்திருத்தப்பட்டுத் தயாரான நிலையில் முஸ்லிம் பகுதிகளிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான நெல்வயல்களை அவர்களிடமிருந்து அபகரிப்பதிலும் ஏனைய மாவட்டங்களிலிருந்து சிங்கள உறவினர்களைக் கொண்டுவந்து குடியேற்றுவதிலும் அதிக அக்கறையுடையவர்களாக இருந்தனர். இந்தச் சூழ்ச்சித்திட்டம் அம்பாரை மாவட்ட பூர்வீகக் குடிகளான முஸ்லிம் தமிழ் மக்களின் பொருளாதாரத்தையும், அரசியல் அந்தஸ்தையும் பாருதூரமாகப் பாதித்துள்ளது.

*"சிங்கள தமிழ் மேலாதிக்கவாதம் முஸ்லிம்களின் உயிர்களை மாத்திரமன்றி அவர்களது உயிர் நாடியான பொருளாதாரத்திலும் திட்டமிட்டு அடித்தது. அந்த வகையில் அக்கரைப்பற்றில் 1000ற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தங்கள் சொந்த விளை நிலங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.*

*இந் நிகழ்வுகள் விரட்டப்பட்ட அவர்களது இயல்பு வாழ்வை எவ்வாறு பாதித்தது என்பதனை சுருக்கமாக இயம்புகிறார் கதைசொல்லி. இவ்வாறு, ஆயிரம் கதைகள் அடங்கியிருக்கிறது அக்கரைப்பற்றின் இதய அறைகளில்..."*



கதைசொல்லி...

எனது முழுப்பெயர் ஆதம்லெவ்வை அகமட் லெவ்வை 14.07.1932ம் ஆண்டு பிறந்த நான் 405ஏ, புதுப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று 06 எனும் விலாசத்தில் மனைவி 9 பிள்ளைகளுடன் மிகச்சாதாரண வாழ்க்கையை நடத்தி வந்திருந்தேன்.

விவசாயத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எனது குடும்பத்தோர் நகர்ந்தது. மனைவி பிள்ளைகளின் கலகலப்பும் வயல் நிலங்களில் நட்டப்படாத விளைச்சலும், ஒற்றுமையான புறச்சூழலும் வாழ்க்கையில் என்நேரமும் இனிப்புத் தந்திருந்தது.

நான் எனது தந்தை சகோதரர்கள் சேர்ந்து அம்பலம் ஓயாவில் காடுவெட்டி துப்பரவு செய்த 6 ஏக்கர் சொந்தமான வயல் நிலமும், அதே போல் காடுவெட்டிய வட்டமடுவில் உள்ள 8 ஏக்கர் நிலமும்தான் எனக்கும் எனது மனைவி பிள்ளைகளுக்குமான ஜீவனோபாய ஊற்றாயின.

அரிசி புளி, உப்பு என்று எடுத்துச் சென்றால் வாரக்கணக்கில் வயல்களில் நின்று வருவதுதான் அன்றைய வழக்காக இருந்தது. ஆனால் சற்றும் எதிர்பாராத ஒரு நாளிகையில் சிங்களக் காடையர் கும்பல் பொல், கத்தி போன்ற கூரிய

ஆயுதங்களுடன் வந்து உடனடியாக இந்த வயல் நிலங்களில் (அம்பலத்தாறு) இருந்து வெளியேறுமாறும், இல்லாது போனால் தாக்கப்போவதாகவும் கூறினர். அந்த சந்தர்ப்பத்தில் அதனை எதிர்த்து சற்று பேசியதற்காக எனது இளைய சகோதரனுக்கு மரக்கட்டையால் தோள்பட்டையில் அடித்தனர்.

கள நிலவரம் ஆர்ப்பாட்டமாக இருந்ததாலும், சிங்களக் கும்பலின் பலம் அந்த சந்தர்ப்பத்தில் ஓங்கி இருந்ததாலும், அங்கிருந்து பின்வாங்கி, பின்னர் பொலிஸ் நிலையத்தின் ஊடாக நிலத்தை மீளப் பெறுவது எமது நிலைப்பாடாக இருந்தது.

சுமார் 20 வருட காலமாக தத்தி தத்தியாய் நான் இழந்த பூமியின் சந்தைப் பெறுமானத்தை விட கூடுதலான பணம் செலவிட்டு, கோடு, பொலிஸ், ஜீ.ஏ.யை சந்திப்பது, கச்சேரிக்கு ஏறி இறங்குவது, தமண பொலிசிற்கு கிழமைக்கு ஒரு முறை சென்றுவருவதென்று ஏகப்பட்ட முயற்சி... பலனேதும் இல்லை. சிங்கள குடியேற்றத்தின் திட்டமிட்ட விரட்டியடிப்பு காலங்கடந்து புரிந்தது. வயதும் சொல்லாமல் கொள்ளாமல் போனது. மாற்று வியாபாரங்களில் அனுபவமின்றி விவசாயத்தை மாத்திரம் நம்பியிருந்ததால், எனது குடும்ப வாழ்க்கையில் தாங்க இயலாத இடி விழுந்தது. என்னைப் பொறுத்தவரையில் அந்த காணியின் இழப்போடு எனது உலகம் அரைவாசியாய் சுருங்கியது.

வாழ்ந்தவர்கள் நாங்கள் என்று விட்டுவிடலாம், வாழும் வயதில் 8 பிள்ளைகள் அதில் பெண்பிள்ளைகள் 6. வாழ்க்கை வண்டியை எப்படியாயினும் ஓட்டித்தான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம்.

எனது அரைவாசி உலகத்தில் மீதமாய் இருந்த வட்டமடுப் பூமியும் நூற்றை அண்டிய எருமை மாடுகளையும் வைத்துக்கொண்டு மீண்டும் வாழ்க்கைச் சமரில் குதித்தேன்.

சிங்கள பேரினவாதத்தின் நேரடித் தாக்குதலுக்கு ஆட்பட்டிருந்ததால் என்னவோ, பால் கறக்க காலையடி, வட்டமடுக் காணி ஆகியவற்றுக்கு செல்லும்போது விடுதலைப் பாதையில் முஸ்லிம் இளைஞர்களையும் ஒருங்கே சேர்த்த ஆயுதம் தாங்கிய தமிழ் போராளிகளையும் கண்ணூடாய் காணும் போதெல்லாம் நம்பிக்கை சுரந்தது.

அந்தோ பரிதாபம், 1989 காலப்பகுதியில் எனது நம்பிக்கை சுக்குநூறானது. வயல் நிலங்களுக்குச் சென்ற முஸ்லிம்களை தமிழ் பேசும் மக்களின் விடுதலையை வேண்டி நின்ற அதே தமிழ் இளைஞர்கள் சுட்டுத் தீர்த்தனர்.

மரண சாசனம் எழுதிவிட்டுத்தான் எனது வட்டமடு காணிக்கு செல்ல வேண்டிய நிலை. காலையடியில் இருந்த எனது மாடுகள் விடுதலை வீரர்களால்

களவாடப்பட்டும், சூறையாடப்பட்டும்...

புயல் அடித்து நின்றதுபோல் நான் நூர்ந்து ஒய்ந்தேன். வாழ்வாதாரத்திற்கான எல்லா கதவுகளும் தாழ்ப்பாலிடப்பட்டன. 8 பிள்ளைகள், மனைவி, நான் வேதனை மனதை அழுத்தியது.

பிள்ளைகளின் வாழ்க்கை? யோசிப்பதற்கே....? எனது உலகம் இன்னும் சுருங்கியது.

எனது வீட்டில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் இருக்கின்ற தரவைக் கட்டில் அந்தி சாயும் நேரத்தில் தனியே இருந்துகொண்டு ஒரு சிகரட்டும் 4 வீடியுடனும் எனது உலகம் உறுண்டது.

ஒரு நாள் இதே இடத்தில் (தரவைக் கட்டில்) இருந்துகொண்டு தெளிவிற்கும் மயக்கத்திற்கும் இடையிலான ஒரு மனநிலையில் பார்த்தேன். எட்டும் தொலைவில் இருந்த முல்லிமலையில் 'அம்பலத்தாறு' காணியில் இருந்து என்னை விரட்டியடித்த அதே சிங்களக் கும்பல். நெடிய ஓங்கி உயர்ந்த புத்தர் சிலையொன்றை நட்டி, அது சாய்ந்துவிடாமல் இருக்க ஒலுவில் துறைமுகத்தில் ஒரு கயிற்றை இழுத்துக் கட்டினர். அச்சம் என்னைக் கவிய மறுபுறம் பார்த்தேன். குடியிருப்பு பாலத்திற்கு பின்னால் கறுப்பு உடையணிந்த பெரிய துப்பாக்கியுடன், எனது மாடுகளை சூறையாடி என்னை எனது வட்டமடு காணிக்குள் போக விடாமல் தடுத்த தமிழ் ஆயுததாரிகள். மூச்சு வாங்கியது எனக்கு...


மீதமாய் இருந்த எனது வீட்டுத் திசையை நோக்கினேன். நான் வாழ்ந்து வசித்து சுவாசித்த புதுப்பள்ளி வீதி! குல்லாச் சேட்டுடன் வயிறு பெருத்த நான்கைந்து முஸ்லிம் போடிமார், '15 லட்சம் ரூபா சீதனம்', 'கொழும்பில ஊடு வளவு' ஒரு படிச்ச பொடியன பைத்துச் சொல்லி மாப்பிள்ளை கூட்டிக்கி செல்கின்றனர்.

எனது 6 பெண் பிள்ளைகள், 2 ஆண்பிள்ளைகள் மனைவி எல்லோரையும் இறைவன்தான் காப்பாற்ற வேண்டும் என மனதார வேண்டினேன்.

18.03.1993ம் ஆண்டு வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் எனது மனைவியின் மடியில் நான் மரணித்தேன்.


●

1989களில் புலிகள் வயல்வெளிகளில் முஸ்லிம்களை கொன்றதற்கு பிற்பாடு இன்னும் செல்லமுடியாமல் உள்ள கதைசொல்லியின் வட்டமடு காணியின் பேமிட் பிரதி..



(164 වන අධිකාරය වූ) ඉඩම් සංවර්ධන ආඥාපනතේ 19(2) වන
වගන්තිය යටතේ ඉඩමක් භුක්ති විඳීම සඳහා දෙන අවසර පත්‍රය

சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட கதைசொல்லியின் அம்பலம் ஓயா காணிக்கான பேமிட் பத்திரத்தின் பிரதி...



Permit No. ..........

# GAL OYA DEVELOPMENT BOARD.

(Act. No. 51 of 1949.)

Temporary Permit to occupy Crown Land for the purpose of
MANAWARI PADDY CULTIVATION.

..........
of .......... (hereinafter referred to as the permit-holder) is hereby permitted to occupy all that portion of Crown Land called .......... (hereinafter referred to as the land), situated in the Village of .......... in the Undeveloped Area under the control of the Gal Oya Development Board and bounded as follows:—

North :
South :
East :
West :

and containing in extent about .......... acres .......... roods and .......... perches (A. 3 R. .......... P. ..........) subject to the provisions of the Crown Lands Ordinance No. 8 of 1947, and to the following conditions, namely:—

1. This permit shall expire on .......... day of .......... 195 .
2. The permit holder shall pay a rent of Rs. .......... per acre in advance to the Gal Oya Development Board.
3. The permit holder shall pay all dues whatsoever payable in respect of the land and of all improvements thereto.
4. This permit may be terminated at any time by the Gal Oya Development Board or any officer acting under its orders on one calendar month's notice in writing being served on the permit-holder personally or by post under registered cover addressed to him/her to his/her last known or usual place of abode or affixed in a conspicuous position on the land.

சர்வதேச மயப்பட்டுப்போன இலங்கையின் சமகால அரசியல் மிகவும் கூரான தளத்தில் இருந்து விமர்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை நோக்கி சிங்கள தமிழ் தேசங்கள் மிகத் தந்திரோபாயங்களோடு அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்திச் செல்கின்றன.

வடக்கு கிழக்கில் நேரடியாக இனப்பிரச்சினையோடு தொடர்புபட்ட, எக்காரணத்தாலும் புறக்கணிக்கப்பட முடியாத, எத்தனையோ ஆயிரம் உயிர்களை பலிகொடுத்த, காணாமல்போன அங்கவீனப்படுத்தப்பட்ட கோடான கோடி சொத்துக்களை இழந்த ஒட்டுமொத்தமாக இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்ட முஸ்லிம்களை சிங்கள தமிழ் தேசங்களுடன் சேர்ந்து, சர்வதேசமும் திட்டமிட்டு புறக்கணிப்பதை, ஏமாற்றுவதை முஸ்லிம்களாகிய நாம் இன்னும் விளங்காமல் இருக்க நியாயமில்லைதான்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை நோக்கி நெருங்கிய தருணத்திலும் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் ஒரு முக்கிய செல்வாக்குச் செலுத்தும் காரணியாக பார்க்கப்படாமை வேதனைக்குரியது. ஆபத்தானது.

